




# தின பூமி

thinaboomi.com











**தாக்குதலை தடுக்க தவறியதாக விமர்சனம்: இஸ்ரேல் ராணுவத்தின் உளவு பிரிவு தலைவர் திடீர் ராஜினாமா**

...2-ம் பக்கம்

**குளிர்ச்சியாக சாப்பிட்டால் தொற்று ஏற்பட வாய்ப்பு: சுகாதாரத்துறை எச்சரிக்கை**

...3-ம் பக்கம்

**கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் வெற்றி: உலக சாம்பியன்ஷிப் தொடருக்கு முன்னேறிய இளம் வீரர் குகேஷ்**

...7-ம் பக்கம்





● உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நிறைவுற்ற நிலையில், நேற்று மதுரையின் மாசி வீதிகளில் திருத்தேரோட்டம் நடைபெற்றது. மீனாட்சி அம்மன் ஒரு தேரிலும், சொக்கநாதர், பிரியாவிடை ஒரு தேரிலும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இந்த தேரோட்டத்தால் மதுரை நகரே குலுங்கியது. லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## மதுரை மாசி வீதிகளில் விமர்சையாக நடந்த சித்திரை திருவிழா தேரோட்டம்

### வடம்பிடித்து இழுத்து பக்தர்கள் உற்சாகம்

மதுரை, ஏப். 23-

மதுர சித்திரை திருவிழாவின் முத்தாய்ப்பு நிகழ்ச்சியாக தேரோட்டம் நேற்று வெகுவிமர்சையாக நடைபெற்றது. மாசி வீதிகளில் வெள்ளமென திரண்டிருந்த பக்தர்கள் இதனை கண்டு களித்தனர்.

உலக பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி- சுந்தரேசுவரர் கோவில் சித்திரை திருவிழா கடந்த 12-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாக்காலங்களில் தினமும் காலை, மாலை வேளைகளில் மீனாட்சி அம்மன், பிரியா விடை- சுந்தரேசுவரர் மதுரை வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

வீதி உலாவின் போது சிறுவர், சிறுமிகள் கடவுள் வேடமணிந்து கோலாட்டம் அடித்தபடி செல்வது பொதுமக்களை பரவசம் அடையச் செய்கிறது. மீனாட்சி அம்மன் பட்டா பிஷேகம், திக்கு விஜயம் போன்ற வைபவங்களை தொடர்ந்து 10-ம் திருநாளான நேற்று முன்தினம் மீனாட்சி திருக்கல்யாணம் நடைபெற்றது.

மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவை காண ஏராளமானோர் திரண்டனர். மீனாட்சி அம்மனுக்கு மங்கலநாண் அணிவிக்கப்பட்டதும் அங்கு கூடியிருந்த பெண்கள் தங்களது தாலியை புதுப்பித்துக் கொண்டனர். தொடர்ந்து அன்னதானம், திருக்கல்யாண விருந்து, மொய் செலுத்துதல் போன்றவையும் நடைபெற்றன.

சித்திரை திருவிழாவின் மற்றொரு முத்தாய்ப்பு நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்று காலை விமரிசையாக நடைபெற்றது. முன்னதாக 2 தேர்களும் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தன.

நேற்று அதிகாலை 4 முதல் 4.30 மணிக்கு மீனாட்சி அம்மன், பிரியாவிடை- சுந்தரேசுவரர் ஆகியோர் முத்தம்பல முதலியார் கட்டளை மண்டகப்படி, ராமநாதபுரம் சேதுபதி மகா ராஜா மண்டகப்படிக்கு எழுந்தருளினர். அங்கு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

தொடர்ந்து ஒரே பல்லக்கில் மீனாட்சி அம்மன், பிரியாவிடை- சுந்தரேசுவரர் கீழமாசி வீதியில் உள்ள தேரடிக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு தீபாராதனைகள் நடத்தப்பட்டன.

அதன்பிறகு பிரியாவிடை- சுந்தரேசுவரர் பெரிய தேரிலும், மீனாட்சி அம்மன் சிறிய தேரிலும் எழுந்தருளினர். அப்போது பக்தர்கள் பக்தி கோஷம் எழுப்பினர். தேரோட்டம் தொடங்குவதற்கு முன்பு அங்குள்ள கருப்பண சுவாமிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

தொடர்ந்து பஞ்ச வாத்தியங்கள் முழங்க பக்தர்கள் வடம் பிடித்து தேரை இழுத்தனர். காலை 5.15 மணிக்கு மேல் 5.40 மணிக்குள் மேஷ

(கடைசி பக்கம் பார்க்க)

## மதுரை சித்திரை திருவிழாவின் முத்தாய்ப்பு நிகழ்ச்சி: கள்ளழகர் இன்று ஆற்றில் இறங்குகிறார்

### பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குவிகிறார்கள்

மதுரை, ஏப். 23-

சித்திரை திருவிழாவின் முத்திரை நிகழ்ச்சியாக இன்று அதிகாலையில் **5.51** மணிக்கு மேல் **6.10** மணிக்குள் மதுரை வைகை ஆற்றில் தங்கக்குதிரையில் வீற்றிருந்து கள்ளழகர் இறங்குகிறார். அழகர் ஆற்றில் இறங்கும் வைபவத்தை காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குவிகிறார்கள்.

மதுரைக்கு வடக்கே 21 கிலோ மீட்டர் தொலைவில் அழகர் கோவிலில் இயற்கை எழிலுடன், வற்றாத நூபுரகங்கையுடன் அமைந்துள்ளது பிரசித்திபெற்ற கள்ளழகர் கோவில். இந்த கோவிலில் நடைபெறும் சித்திரை திருவிழா தனி பெருமையுடையதாகும்.

இந்த ஆண்டுக்கான சித்திரை திருவிழாவானது கடந்த 19-ம் தேதி தொடங்கியது. 3-ம் நாள் விழாவான நேற்று முன்தினம் சிறப்பு பூஜைகள் நடந்தன. மாலையில், அலங்கரிக்கப்பட்ட தங்கப்பல்லக்கில் கள்ளழகர் கண்டாங்கி பட்டு உடுத்தி, கையில் நேரிக்கம்பு ஏந்தி எழுந்தருளினார்.

வேத மந்திரங்கள் முழங்க தீபாராதனை நடந்தது. தொடர்ந்து வெளிபிரகாரங்கள் வழியாக மேளதாளம் முழங்க வர்ணக்குடை, தீவட்டி, பரிவாரங்கள், மற்றும் கல்யாண சுந்தரவல்லி யாணை முன் செல்ல அழகர் புறப்பாடு நடந்து, 18-ம்படி கருப்பண சுவாமி கோவிலை அடைந்தது.

அங்கிருந்து மாலை 6.10 மணிக்கு அதிர்வேட்டுகள் முழங்க தங்கப்பல்லக்கில் கள்ளழகர் மதுரை நோக்கி புறப்பட்டார். அப்போது கோவிந்தா, கோவிந்தா என முழங்கிய பக்தர்கள் கள்ளழகரை புடை சூழ்ந்து வந்தனர்.

முன்னதாக தானியங்களையும், பணமுடிப்புகளையும் காணிக்கையாக செலுத்தினர். பொய்கைக்கரைபட்டி, கள்ளந்தரி, அப்பன் திருப்பதி உள்பட பல்வேறு ஊர்களில் மண்டபங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். மொத்தம் 483 மண்டபங்களில் அழகர் எழுந்தருள்கிறார்.

இந்த நிலையில், அழகர் மலையில் இருந்து புறப்பட்ட கள்ளழகர், நேற்று காலையில் மதுரை மாநகருக்குள் வந்தடைந்தார். மாநகரின் எல்லையான மூன்று மாவடி பகுதியில் கோவிந்தா கோஷம் முழங்க எதிர் சேவை செய்து கள்ளழகரை திரளான பக்தர்கள் வரவேற்றனர்.

சித்திரை திருவிழாவின் முத்திரை நிகழ்ச்சியாக இன்று அதிகாலையில் 5.51 மணிக்கு மேல் 6.10 மணிக்குள் மதுரை வைகை ஆற்றில் தங்கக்குதிரையில் வீற்றிருந்து கள்ளழகர் இறங்குகிறார். இதைக் காண மதுரை உள்பட தென் மாவட்டங்களில் இருந்தும், பிறமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் வந்து குவிகிறார்கள்.

நாளை 24-ம் தேதி மண்டூக முனிவருக்கு சாபம் தீர்க்கும் நிகழ்ச்சியும் அன்று இரவு தசாவதார காட்சியும், 26-ம் தேதி அதிகாலை பூப்பல்லக்கு விழாவும் நடைபெற உள்ளது. கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அடிப்படை வசதிகளையும் மாவட்ட நிர்வாகமும் காவல் துறையும் சிறப்பாக செய்துள்ளது.

இந்த நிலையில் மதுரை சித்திரைத் திருவிழா ஏற்பாடு தொடர்பாக, இந்து சமய அறநிலையத் துறைக்கு ஐகோர்ட் மதுரை கிளை பாராட்டுகளை தெரிவித்துள்ளது.

மேலும், கள்ளழகர் வைபவத்தில், அழகருக்கு தண்ணீர் பீய்ச்சி அடிப்பதில் பாரம்பரிய விதிகளையே கடைபிக்க வேண்டும். ரசாயனம் கலந்த தண்ணீரோ அல்லது பால், தயிர் கலந்த தண்ணீரை அடிக்கக்கூடாது என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அரசின் நடவடிக்கைகள் நீதிமன்றத்திற்கு திருப்தி அளிக்கிறது என என ஐகோர்ட் மதுரை கிளை தெரிவித்துள்ளது.

## நாடு முழுவதும் வெப்ப அலை எதிரொலி: ஓட்டுப்பதிவு சதவீதத்தை அதிகரிப்பது எப்படி?

### இந்திய தேர்தல் ஆணையம் ஆலோசனை

புதுடெல்லி, ஏப். 23-

நாடு முழுவதும் வெப்ப அலை காரணமாக ஓட்டுப்பதிவு சதவீதம் குறையாமல் அதனை அதிகரிப்பது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் நேற்று ஆலோசனை நடத்தியது.

**வாக்களிப்பதில் சிரமம்..**

நாடு முழுவதும் வெப்ப அலை பரவல் பெரும் தாக்கம் ஏற்படுத்தி வருகிறது. இந்த சூழலில், பாராளுமன்ற மக்களவை தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது. நாடு முழுவதும் கடந்த 19-ம் தேதி 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் முதல்கட்ட மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடந்து முடிந்தது. இதனை தொடர்ந்து, ஏப்ரல் 26-ம் தேதி 2-வது கட்ட தேர்தலும், மே 7, மே 13, மே 20, மே 25 மற்றும் ஜூன் 1 ஆகிய தேதிகளில் மீதமுள்ள கட்டங்களுக்கான தேர்தலும் நடைபெறும். எனினும், வெப்ப அலையால், மக்கள் வாக்களிப்பதில் சிரமம் ஏற்படாமல் இருப்பது பற்றி தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**கேரளாவில் 2-ம் கட்ட..**

இன்னும் 6 கட்ட வாக்குப்பதிவு நடைபெற வேண்டி உள்ளது. இந்த நிலையில் நாடு முழுவதும் கடுமையான வெப்பம் தாக்குகிறது. பல இடங்களில் வெப்ப அலை வீசும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. கேரளாவில் வருகிற 26-ம் தேதி வாக்குப்பதிவு நடக்க உள்ள நிலையில் மாநிலத்தில் வெப்பமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பத்தினம் திட்டா, எர்ணாகுளம், கண்ணூர், ஆலப்புழா, கோட்டயம், மலப்புரம், கொல்லம், திருச்சூர், கோழிக்கோடு, பாலக்காடு ஆகிய 10 மாவட்டங்களுக்கு வருகிற 25-ந்தேதி வரை உயர் வெப்பநிலை எச்சரிக்கை மற்றும் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. திருச்சூர் மற்றும் கொல்லம் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை பதிவாகும் எனவும், மற்ற மாவட்டங்களிலும் இயல்பை விட அதிக வெயில் அடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**மேற்கு வங்கம்-ஒடிசா...**

இதேபோல் நாடுமுழுவதும் பல மாநிலங்களில் வெப்ப அலை வீசும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. டெல்லியில், அடுத்த 2-3 நாட்களில் வெப்பநிலை 38 டிகிரி செல்சியசாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 1-2 டிகிரி வரை அதிகரிக்கக்கூடும். மேலும், வடகிழக்கு மாநிலங்களில் வெப்பநிலை 44 டிகிரி செல்சியசை எட்டியுள்ளது. அடுத்த 4-5 நாட்களில் வெப்பநிலை மேலும் அதிகரிக்கும். வெயில் அதிகரித்து வருவதால் மேற்கு வங்கத்தில் சிவப்பு எச்சரிக்கையும், ஒடிசாவில் ஆரஞ்சு எச்சரிக்கையும் விடப்பட்டது. ஒடிசாவில் ஆரஞ்சு எச்சரிக்கை அடுத்த 4 நாட்களுக்கு தொடரும். பீகாரில் அடுத்த 5 நாட்களுக்கு வெப்ப அலை நிலவும். ஜார்க்கண்ட் மாநிலத்தில் வெப்ப அலைக்கான சாத்தியம் உள்ளது.

**ஆணையம் ஆலோசனை**

இப்படி நாடு முழுவதும் வெப்பத்தின் தாக்கம் அசாதாரண சூழ்நிலையில் இருப்பதால் தேர்தல் ஆணையம் இன்று டெல்லியில் அவசரமாக கூடி ஆலோசித்தது. தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் இந்திய வானிலை ஆய்வு மைய அதிகாரிகள், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய அதிகாரிகள், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக அதிகாரிகள் கலந்து கொண்டனர். கடுமையான வெப்பம் தாக்கும் என்பதால் வாக்குப்பதிவு, பிரசாரம் நடைமுறைகளில் என்னென்ன மாற்றங்கள் செய்யலாம் என்று அதிகாரிகள் விவாதித்தனர். மேலும், நாடு முழுவதும் அதிகரித்து வரும் வெப்ப அலை காரணமாக வாக்குப்பதிவு குறையாமல், வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிப்பது தொடர்பாகவும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இந்த கூட்டத்தில் தலைமை தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஞானேஷ் குமார், சுக்பீர் சிங் சந்து ஆகியோரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தரப்பில் கூறப்பட்டது.

## தமிழகத்தில் வாக்குப்பதிவு சதவீத குளறுபடிக்கு செயலியே காரணம்

### தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தகவல்

சென்னை, ஏப். 23-

தமிழ்நாட்டில் நடைபெற்ற வாக்குப்பதிவில் ஏற்பட்ட குளறுபடிக்கு செயலியே காரணம் என தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு விளக்கம் அளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 39 தொகுதிகளில் பாராளுமன்ற மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த கடந்த 19-ம் தேதி நடைபெற்றது. வாக்குப்பதிவு நிறைவு பெற்றதை தொடர்ந்து முகவர்கள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு சீல் வைக்கப்பட்டு ஸ்ட்ராங் ரூம் எனப்படும் கட்டுப்பாட்டு அறைக்கு கொண்டு செல்லப்பட்டது.

வாக்குப்பதிவு நிறைவு பெற்றதை தொடர்ந்து, தமிழ்நாட்டில் 72.09 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது என்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்திருந்தார். பின்னர் தமிழ்நாட்டில் 69.46 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது என இந்திய தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்தது.

தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்புக்கும், இந்திய தலைமை தேர்தல் ஆணையம் அறிவிப்புக்கும் நிறைய வேறுபாடு இருப்பதால் வாக்கு சதவீதத்தில் குளறுபடியா? என கேள்வி எழுந்தது. இது பலருக்கும் குழப்பதை ஏற்படுத்திய நிலையில், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு வாக்கு சதவீதம் குறித்து விளக்கம் அளிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், தமிழக தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவிக்கையில்., "செயலியில் கிடைத்த தகவல் அடிப்படையில் வாக்குப்பதிவு சதவீதம் கணக்கிட்டதால் சில குளறுபடிகள் நடைபெற்றன. செயலியில் அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களும் கட்டாயமாக அப்டேட் செய்ய வேண்டும் என்று எந்த உத்தரவும் இல்லை எனக் கூறி, ஒரு சிலர் மட்டுமே அப்டேட் செய்தார்கள். இதன் காரணமாகவே வாக்குப்பதிவு சதவீத குளறுபடி ஏற்பட்டது.

தேர்தல் நடத்தும் அதிகாரிகையெழுத்து போட்டு கொடுக்கும் தகவல் கால தாமதம் ஆகும். அதன் காரணமாகவே செயலி மூலமாக மீடியாவுக்கு அப்டேட் செய்தோம். திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, நிலகிரி, கோவை, தேனி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, திருப்பத்தூர் ஆகிய 12 மாவட்ட எல்லை பகுதிகளில் நிலையான கண்காணிப்பு குழு மற்றும் பறக்கும் படையினர் கண்காணிப்பில் ஈடுபடுவர். தமிழ்நாட்டில், எந்த தொகுதியிலும் மறுவாக்குப்பதிவு கேட்டு கோரிக்கை வைக்கப்படவில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோடை விடுமுறையில் சிறப்பு வகுப்புகள் நடத்தக்கூடாது

### தமிழக பள்ளிக்கல்வித்துறை எச்சரிக்கை

சென்னை, ஏப். 23-

தமிழகம் முழுவதும் பள்ளிகளில் கோடை விடுமுறையில் சிறப்பு வகுப்புகள் நடத்தக்கூடாது என்ற பள்ளிக்கல்வித்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

கோடை விடுமுறையில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் எந்தவித சிறப்பு வகுப்புகளும் நடத்தக்கூடாது என்று பள்ளிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக பள்ளிக் கல்வித் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், முதல்வர் தனிப்பிரிவில் 14417-ல் பெறப்பட்ட புகார் மனுவில், பள்ளி மாணவர்களுக்கு கோடை விடுமுறை மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் பள்ளிகளில் சிறப்பு வகுப்புகள் நடத்துவதாகவும் , இதனால் மாணவர்களுக்கு உளவியல் ரீதியாக பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும் புகார் பெறப்பட்டுள்ளது.

இப்புகார் சார்பாக அனைத்து பள்ளிகளும் கோடை விடுமுறை மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் பள்ளிகளில் சிறப்பு வகுப்புகளை தவிர்க்குமாறும் , மாணவர்களை சிறப்பு வகுப்புகளுக்கு வரவழைக்க அழுத்தம் தரக்கூடாது என்றும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 560.29 | 189.04 |
| பாயிண்ட் 73648.62 | பாயிண்ட் 22336.4 |



**தங்கம்**
1 சவரன் ₹54,760
1 கிராம் ₹6,845



**வெள்ளி**
1 கிலோ ₹89,000
1 கிராம் ₹89.00

**டாலர்** ₹83.39

**பெட்ரோல்** ₹101.57
**டீசல்** ₹93.18



# இஸ்ரேல் ராணுவத்தின் உளவு பிரிவு தலைவர் திடீர் ராஜினாமா



**டெல் அவிவ்,ஏப் 23-**
இஸ்ரேல் ராணுவத்தின் உளவு பிரிவு தலைவர் அஹ்ரோன் ஹலிவா திடீரென ராஜினாமா செய்துள்ளார்.

காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினர் கடந்த அக்டோபர் 7-ம் தேதி இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். அப்போது ஒரே நாளில் 1,200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் 250 பேரை பணய கைதிகளாக அவர்கள் கடத்திச் சென்றனர்.

இதனையடுத்து காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இதற்கிடையே காசாவை முற்றிலும் அழிக்கும் வரை ஓயமாட்டோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் சபதம் விடுத்துள்ளார். அதன்படி இந்த போர் 6 மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனால் லட்சக்கணக்கானோர் தங்களது குடியிருப்பை விட்டு வெளியேறி உள்ளனர். அவர்களில் பலர் அண்டை நாடுகளான எகிப்து, லெபனான் எல்லையில் உள்ள அகதிகள் முகாமில் தங்கி வருகின்றனர். ஆனால் அகதிகள் முகாமை குறிவைத்தும் இஸ்ரேல் அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றது. இரு தரப்புக்கும் இடையே நடைபெற்று வரும் இந்த மோதலில் 34 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக இஸ்ரேல், காசா மீதான தாக்குதலை தீவிரப்படுத்தி வரும் நிலையில், இஸ்ரேல் ராணுவத்தின் உளவு பிரிவு தலைவர் அஹ்ரோன் ஹலிவா திடீரென ராஜினாமா செய்துள்ளார். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஹமாஸ் இயக்கத்தினர் நடத்திய தாக்குதலை தடுக்க தவறியதாக அஹ்ரோன் மீது விமர்சனங்கள் எழுந்த நிலையில், தனது பதவியில் இருந்து அவர் விலகியிருக்கிறார்.

# அமெரிக்க குடியுரிமை பெற்ற 2-வது பெரிய நாடாக இந்தியா



**வாஷிங்டன், ஏப் 23-**
அமெரிக்க குடியுரிமை பெற்ற 2- வது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.

அமெரிக்க நாட்டில் வசிக்க உலகம் முழுவதும் பெரும்பாலான மக்கள் விரும்பி வருகிறார்கள். மேலும் வேலை மற்றும் படிப்புக்காக பல்வேறு நாடுகளை சேர்ந்த ஏராளமான மக்கள் அமெரிக்கா சென்று வருகிறார்கள்.

அமெரிக்காவின் வாழ்க்கை ,வசதிகள் பிடித்த காரணத்தால் அந்நாட்டில் வசிப்பதற்கு குடியுரிமை பெற தினந்தோறும் ஏராளமான பேர் விண்ணப்பித்து வருகின்றனர். 2022 -ம் ஆண்டின் கணக்கெடுப்பு படி 46 மில்லியன் வெளிநாட்டில் பிறந்த மக்கள் அமெரிக்காவில் வசிக்கின்றனர்.

இது அமெரிக்க நாட்டின் மொத்த மக்கள் தொகையான 333 மில்லியனில் 14 சதவீதம் ஆகும். மெக்ஸிகோவில் பிறந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் தற்போது அமெரிக்காவில் வசிக்கின்றனர்.

அதைத் தொடர்ந்து இந்தியா, பிலிப்பைன்ஸ், கியூபா மற்றும் டொமினிகன் குடியரசு நாடுகளை சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள் என சமீபத்திய கணக்கெடுப்பு ஆய்வு தெரிவித்துள்ளது.

2022 -ல் 128,878 மெக்சிகன் மக்கள் அமெரிக்க குடியுரிமை பெற்றனர். அதை தொடர்ந்து, இந்தியாவை சேர்ந்தவர்கள் 65,960 பேர் குடியுரிமை பெற்றுள்ளனர். பிலிப்பைன்ஸ் 53,413, கியூபா 46,913, டொமினிகன் குடியரசு 34,525, வியட்நாம் 33,246 பேர் குடியுரிமை பெற்றனர்.

இந்நிலையில் தற்போது 65,960 இந்தியர்கள் அமெரிக்க குடியுரிமை பெற்றுள்ளனர். மெக்சிகோவிற்கு அடுத்தபடியாக அமெரிக்க குடியுரிமை பெற்ற 2- வது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.

# தமிழக மகளிர் காங்கிரசுக்கு புதிய தலைவர் நியமனம்



**சென்னை, ஏப் 23-**
தமிழ்நாடு மகளிர் காங்கிரஸ் தலைவியாக ஹசீனா சையத் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு மகளிர் காங்கிரஸ் தலைவியாக சுதா ராமகிருஷ்ணன் இருந்தார். அவர் மக்களவை தேர்தலில் மயிலாடுதுறை தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டுள்ளார்.

இந்நிலையில் தமிழ்நாடு மகளிர் காங்கிரஸ் தலைவியாக ஹசீனா சையத் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் பிறப்பித்துள்ளார்.

காங்கிரஸ் பாரம்பரிய குடும்பத்தைச் சேர்ந்த ஹசீனா சையத்தின் தந்தை சுதந்திர போராட்ட வீரர் ஆவார். ஹசீனா இளம் பருவத்தில் இருந்தே காங்கிரசில் பயணித்து வருகிறார். மாணவர் காங்கிரஸ், இளைஞர் காங்கிரசில் முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

அகில இந்திய மகளிர் காங்கிரசில் கடந்த 12 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். அதில் அகில இந்திய செயலாளராகவும், தமிழக காங்கிரஸ் செய்தித் தொடர்பாளராகவும், பல்வேறு மாநிலங்களுக்கான தேர்தல் பொறுப்பாளராக இருக்கும் அவர், தற்போது மாநில மகளிர் காங்கிரஸ் தலைவியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும் போது, மகளிருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கட்சி காங்கிரஸ். நாட்டின் முதல் பெண் பிரதமர், முதல் பெண் ஜனாதிபதி காங்கிரஸ் ஆட்சியில்தான் கொண்டுவரப்பட்டனர்.

மகளிர் பாதுகாப்புக்கு எப்போதும் காங்கிரஸ் துணை நிற்கும். எனக்கு இப்பதவியை கொடுத்த காங்கிரஸ் தலைமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிரான முதல் குரலை மகளிர் காங்கிரஸ் கொடுக்கும் என்று கூறினார்.

# மாலத்தீவு பாராளுமன்ற தேர்தலில் அதிபர் முய்சு கட்சி அமோக வெற்றி



**மாலே, ஏப் 23-**
மாலத்தீவு பாராளுமன்ற தேர்தலில் அதிபர் முய்சு தலைமையிலான பி.என்.சி. கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

மாலத்தீவில் நேற்று முன்தினம் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் 284,663 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். நேற்று முன்தினம் மாலை 5 மணி வரைக்கும் தேர்தல் நடைபெற்றது. இதில் 72.96 சதவீத வாக்குகள் பதிவாகின.

ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 826 ஆண்களும், ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 867 பெண்களும் வாக்களித்திருந்தனர். 93 உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்ற தேர்தலில் மொத்தமாக 368 வேட்பாளர்கள் களம் கண்டனர். அதில் 130 பேர் சுயேட்சையாக போட்டியிட்டனர்.

இதில் அதிபராக இருக்கும் மொய்சு தலைமையிலான பி.என்.சி. கட்சி 90 தொகுதிகளிலும் போட்டியிட்டது. முக்கிய எதிர்க்கட்சியான மாலத்தீவு ஜனநாயக கட்சி 89 இடங்களிலும் போட்டியிட்டது.

வாக்குப்பதிவு முடிந்த கையோடு, வாக்கு எண்ணிக்கை உடனடியாக தொடங்கப்பட்டது. வாக்கு எண்ணிக்கை தொடங்கியதில் இருந்தே மொய்சுவின் பி.என்.சி கட்சி பெரும்பலாலான இடங்களில் முன்னணி வகித்தன.


மொய்சு தலைமையிலான பி.என்.சி. 60 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று சூப்பர் மெஜாரிட்டியை பெற்றுள்ளது. அதே வேளையில் எதிர்க்கட்சியான மாலத்தீவு ஜனநாயக கட்சி 12 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. 10 இடங்களில் சுயேட்சையாக நின்றவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த தேர்தலில் மூன்று பெண்கள் மட்டும் வெற்றி பெற்றுள்ளனர். பி.என்.சி. கட்சி சார்பில் மூன்று பெண்கள் களம் நிறுத்தப்பட்டனர். அந்த மூன்று பெண்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

கடந்த 2019 தேர்தலில் மாலத்தீவு ஜனநாயக கட்சி 64 இடங்களை கைப்பற்றி சூப்பர் மெஜாரிட்டி பெற்றது. பி.என்.சி. - பி.பி.எம். கூட்டணி எட்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

மாலி, அட்டு, புவாஹ்முலாஹ் ஆகிய நகரங்களில் பி.என்.சி ஆதிக்கம் செலுத்தி அதிகப்படியான இடங்களை பிடித்துள்ளன. மாலத்தீவு அதிபர் முய்சு இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளார். சீனாவுடன் நட்பை மேம்படுத்த விரும்புகிறார். இந்திய ராணுவம் மலேசியாவில் இருந்து வெளியேற உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரபல திரைப்பட இயக்குனர் 'பசி' துரை காலமானார்



**சென்னை, ஏப் 23-**
பிரபல திரைப்பட இயக்குனர் துரை நேற்று காலமானார். அவரது மறைவிற்கு தமிழ் திரையுலகினர் பலரும் தங்களது இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர்.

தமிழ் திரையுலகில் மிகப்பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்ற 'பசி' திரைப்படத்தின் இயக்குனர் துரை உடல் நலக்குறைவால் நேற்று காலமானார். அவருக்கு வயது 84. இவருக்கு மனைவியும் 2 மகன்களும் ஒரு மகளும் உள்ளனர்.

இயக்குநர் துரை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் 46 படங்களை இயக்கியுள்ளார்.

இவர் இயக்கிய 'பசி' திரைப்படத்திற்கு 1979-ம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படம் மற்றும் சிறந்த நடிகைக்கான தேசிய விருது கிடைத்தது. சென்னையின் கூவம் ஆற்றின் கரையோரம் வாழும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை மையமாக கொண்டு இந்த படம் எடுக்கப்பட்டது. சிறந்த இயக்குனர் , திரைப்படம், நடிகை என்று மூன்று தேசிய விருதுகளோடு மாநில அரசு விருதுகள், பிலிம்பேர் விருதுகள் என பல்வேறு விருதுகளை குவித்த திரைப்படம் பசி.

ஜெயபாரதி, கமல்ஹாசன் உள்ளிட்டோரும் இந்த திரைப்படத்தில் நடித்துள்ளனர். இயக்குநர் மட்டுமன்றி கதாசிரியர், தயாரிப்பாளர் என்ற பன்முகத் திறமை கொண்டவர் துரை. அவர் இயக்கிய அவளும் பெண்தானே, ஆசை 60 நாள், பாவத்தின் சம்பளம், ஒரு வீடு ஒரு உலகம், கிளிஞ்சல்கள் உள்ளிட்ட திரைப்படங்கள் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றவைகளாகும். இயக்குநர் துரை மறைவிற்கு தமிழ் திரையுலகினர் தங்களது இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர்.

**23-04-2024**




**மேஷம்** – தன வரவு கூடும். எல்லா நலன்களும் உண்டாகும். இனிய பயணங்கள் இன்பம் தரும். நண்பர்கள் ஆதரவால் மனம் மகிழும். புதுப்புது சிந்தனைகள் தோன்றும்.

**ரிஷபம் --** அக்கம் பக்கத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது. குழந்தைகள் நிம்மதி குறையும். பயணத்தின் போது வேகத்தை குறைத்தால் விபத்தை தவிர்க்கலாம்.

**மிதுனம் --** குடும்பத்தில் நிம்மதி குறையும். வயிற்று உபாதைகள் எழலாம். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் செல்லவும். குளக்கரை, கிணறு, ஆறு போன்ற நீர் நிலைகளில் எச்சரிக்கை தேவை.

**கடகம் --** மனைவியின் ஆதரவால் மனம் மகிழும் நாள். எதிர்பார்த்த இனங்களில் எதிர்பார்த்தபடி தடங்கலின்றி தனவரவு அதிகரிக்கும். புதுப்புது சிந்தனைகள் தோன்றும்.

**சிம்மம் ––** குடும்பத்தில் வீண் செலவுகள் அதிகரிக்கும். குழந்தைகள் படிப்பில் கவனம் செலுத்துங்கள். வம்பு, வழக்கு மற்றும் வாக்கு வாதங்களை தவிர்க்க வேண்டிய நாள்.

**கன்னி** – எதிர்பார்த்தபடி வருமானம் அதிகரிக்கும். உறவுகளைச் சந்திப்பதால் மனமகிழ்ச்சி ஏற்படும். படுக்கை அறை சுகங்கள் மற்றும் நல்ல, ருசியான உணவு வகைகள் ஆகியவையும் கிடைக்கும்.

**துலாம் --** தனவரவு சுமாராக இருக்கும். இடமாற்றங்கள் இருக்கலாம். பெண்களால் விரயச் செலவுகள் அதிகரிக்கும். வரும் வாடிக்கையாளரிடம் இனிமையாக பேசினால் இலாபம் அதிகரிக்கும்.

**விருச்சிகம் --** தனவரவு அதிகரித்து மனத் திருப்தி ஏற்படும். வாக்கு வன்மையால் வளம் பெருகும். நோக்கும் இடமெல்லாம் முன்னேற்றத்திற்கான ஒளி மிக்க வழி தெரியும்.

**தனுசு --** அரசு மூலம் புதிய பணிக்கான உத்தரவுகளை எதிர்பார்க்கலாம். ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்க மனமகிழ்ச்சி பெருகும். புதிய திருப்பங்கள் எதிர்காலம் ஒளிமயமாக அமையும்.

**மகரம்** – தொழில் விஷயங்களில் அரசு ஆதரவு இருக்கும். மனதில் அமைதி நிலவும். உளவாரப்பணி போன்ற தெய்வீக திருப்பணிகளில் ஈடுபாடு ஏற்படும். உல்லாசப் பயணங்களால் உள்ளம் மகிழும்.

**கும்பம் --** நினைத்தபடி எதுவும் நடக்காது. வாழ்க்கையில் புதுத் திருப்பங்கள் ஏற்படும். நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை அல்லவா ?. தொழில் அபிவிருத்திக்கான திட்டங்கள் தாமதப்படும்.

**மீனம்** – அரசால் அனுகூலங்கள் உண்டு. காதல் வெற்றி களிப்பு தரும். மனைவி மூலம் நன்மையும், மகிழ்வும் பெருகும். நேர்மையுடன் செயல்படுங்கள். பிறரிடம் பணிவுடன் இருந்தால், பெறும் பயன்கள் அதிகரிக்கும்.

### இஸ்ரேல் தாக்குதலில் பலியான கர்ப்பிணியின்

# வயிற்றிலிருந்து குழந்தையை உயிருடன் எடுத்த டாக்டர்கள்



**காசா, ஏப் 23-**
இஸ்ரேல் தாக்குதலில் பலியான கர்ப்பிணியின் வயிற்றில் இருந்து குழந்தையை அறுவை சிகிச்சை மூலம் வெளியே எடுத்தனர். பின்னர் அந்த பெண் குழந்தையை இன்குபேட்டரில் வைத்து டாக்டர்கள் பராமரித்து வருகிறார்கள்.

பாலஸ்தீனத்தின் காசா முனை மீது இஸ்ரேல் போர் தொடுத்து தாக்குதலை தொடர்ந்து வருகிறது. இதில் குழந்தைகள், பெண்கள் உள்பட 34 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலியானார்கள்.

இந்த நிலையில் காசாவின் ரபா நகரில் நேற்று முன்தினம் இரவு இஸ்ரேல் வான் வழித் தாக்குதலை நடத்தியது.

இதில் 22 பேர் உயிரிழந்தனர். பலியானவர்களில் கர்ப்பிணி, அவரது கணவர், 3 வயது குழந்தை ஆகியோரும் அடங்குவர்.

உயிரிழந்த கர்ப்பிணியான சப்ரீன் அல்-சகானி 30 வார கால கர்ப்பமாக இருந்தார். அவரது வயிற்றில் இருந்து குழந்தை உயிருடன் இருப்பதை அறிந்து டாக்டர்கள் உடனே அறுவை சிகிச்சை செய்து வெளியே எடுத்தனர்.

பின்னர் அந்த பெண் குழந்தையை இன்குபேட்டரில் வைத்து டாக்டர்கள் பராமரித்து வருகிறார்கள். குழந்தையின் மார்பின் குறுக்கே டேப்பில் தியாகி சப்ரீன் அல்-சகானியின் குழந்தை என்று எழுதப்பட்டிருந்தது.

1.4 கிலோ எடையுள்ள குழந்தை, அவசரகால பிரிவில் பிரசவிக்கப்பட்டு உடல் நிலை படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வருகிறது. குழந்தை மூன்று முதல் நான்கு வாரங்கள் மருத்துவமனையில் இருக்கும் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

சகானியின் மகள் மலக், தனது புதிய சகோதரிக்கு அரபு மொழியில் ரூஹ் என்று பெயரிட விரும்பினாள் என்று அவரது உறவினர் ரமி அல்-ஷேக் தெரிவித்தார்.

# ஜம்மு காஷ்மீரில் 9 இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை

**ஜம்மு, ஏப் 23-**
ஜம்மு காஷ்மீரில் நேற்று 9 இடங்களில் தேசிய புலனாய்வு படை அதிகாரிகள் (என்.ஐ.ஏ.) சோதனையில் ஈடுபட்டனர். பயங்கரவாதிகளுடன் தொடர்பு, பயங்கரவாத அமைப்புகளின் வளர்ச்சிக்கு நிதி திரட்டுதல், பணப்பரிமாற்றம் உள்ளிட்ட சந்தேகத்தின் அடிப்படையில் இந்த சோதனை நடப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. ஸ்ரீநகரில் உள்ள கலம்தான் போராவை சேர்ந்த முகாமில் ஷபி கான் (25) என்பவரது வீட்டில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர். இவர் ரெவ்லான் இந்தியா என்ற அழகு சாதன நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். மேலும் ஓய்வு பெற்ற அரசுப் பேருந்து ஊழியரான முஷ்டாக் அகமது தார் என்பவரின் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. இது தவிர மேலும் பல இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர். இது தொடர்பாக ஏற்கனவே மத்திய படை பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இந்த சோதனையில் துணை ராணுவத்தினர், மாநில போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

### ஆசிரியர் பணி நியமன ஊழல் வழக்கு:

# 24,000 பணியிட உத்தரவுகளை ரத்து செய்து கொல்கத்தா ஐகோர்ட் உத்தரவு



**கொல்கத்தா, ஏப் 23-**
மேற்கு வங்க ஆசிரியர்கள் பணி நியமன ஊழல் தொடர்பான வழக்கை விசாரித்த கொல்கத்தா ஐகோர்ட், மேற்கு வங்க பள்ளி சேவை ஆணையத்தால் அமைக்கப்பட்ட 2016-ம் ஆண்டுக்கான ஆசிரியர் நியமனக் குழு செல்லாது எனவும் இதனால், அந்த நியமனக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்ட 24,000 பேரின் பணிகளும் ரத்து செய்யப்படுவதாகவும் உத்தரவிட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் கடந்த 2014 - 2016 வரை நடந்த அரசு ஆசிரியர்கள் நியமனத்தில் முறைகேடுகள் நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. அதாவது, தகுதித் தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்றவர்கள் மெரிட் பட்டியலில் இடம் பெற்றனர்.

பலர் வெற்று விடைத்தாள்களை, பெயர், முகவரியுடன் சமர்ப்பித்து, உதவி ஆசிரியர்களாக நியமன ஆணைகளை பெற்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதுகுறித்து கொல்கத்தா ஐகோர்ட்டில் ஏராளமான புகார் மனுக்கள் குவிந்தன.

மேற்கு வங்க பள்ளி சேவை ஆணையத்தில், கூடுதல் நியமனக் குழு முறைகேடாக உருவாக்கப்பட்டு, ஆசிரியர் தகுதித் தேர்வில் தோல்வியடைந்தவர்களையும், இந்தக் குழு தேர்வு செய்துள்ளதாக வழக்கை விசாரித்த சி.பி.ஐ.யும் குற்றஞ்சாட்டியது.

இந்த வழக்கின் மீதான விசாரணைகள் கடந்த மார்ச் 20-ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில், தீர்ப்புக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கில் நேற்று கொல்கத்தா ஐகோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் தேபாங்சு பசாக், ஷபார் ரஷிதி அடங்கிய அமர்வு,

மேற்கு வங்க பள்ளி சேவை ஆணையத்தால் அமைக்கப்பட்ட 2016-ம் ஆண்டுக்கான ஆசிரியர் நியமனக் குழு செல்லாது. இதனால், அந்த நியமனக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்ட 24,000 பேரின் பணிகளும் ரத்தாகிறது. வெற்று விடைத்தாள்களைக் கொடுத்திருந்தும் கூட சட்டவிரோதமாக பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பள்ளி ஊழியர்கள் தாங்கள் இதுவரை பெற்ற சம்பளத்தை 4 வாரங்களுக்குள் திருப்பியளிக்க வேண்டும். மாவட்ட கலெக்டர்கள் அந்தத் தொகையை சம்பந்தப்பட்ட நபர்களிடம் இருந்து வசூலிக்க வேண்டிய பொறுப்பை ஏற்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

மேலும், சர்ச்சைக்குள்ளான அந்தத் தேர்வை எழுதிய 23 லட்சம் பேரின் ஓ.எம்.ஆர். (OMR sheets) விடைத்தாள்களையும் மறு மதிப்பீடு செய்யும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் மேற்கு வங்க ஆசிரியர் சேவை ஆணையம் புதிதாக பணி நியமன நடவடிக்கைகளை முன்னெடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்குக்கு தடை கோரிய மனுக்களை மொத்தமாக நீதிமன்றம் தள்ளுபடி செய்ததோடு, சி.பி.ஐ. இவ்விவகாரத்தில் விசாரணையை மேலும் முன்னெடுத்துச் செல்லும்படி வலியுறுத்தியுள்ளது. மேலும் மூன்று மாதங்களுக்குள் விசாரணை அறிக்கையை சி.பி.ஐ. தாக்கல் செய்யும்படியும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

## மக்களவை தேர்தல்: சூரத் தொகுதியின்

# பா.ஜ.க. வேட்பாளர் போட்டியின்றி தேர்வு



**சூரத், ஏப் 23-**

சூரத் தொகுதியின் பா.ஜ.க. வேட்பாளர் முகேஷ் தலால் போட்டியின்றி வெற்றி பெற்றுள்ளார்.

குஜராத்தில் மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற மே 7-ம் தேதி ஒரே கட்டத்தில் நடத்தி முடிக்கப்பட உள்ளது. குஜராத்துக்கு உட்பட்ட சூரத் மக்களவை தொகுதிக்கான தேர்தலில், பா.ஜ.க., காங்கிரஸ் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் என பலர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில், காங்கிரஸ் வேட்பாளர் நிலேஷ் கும்பானியின் வேட்பு மனு நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டது. அவருக்கு போலியான சாட்சி கையெழுத்திடப்பட்டு உள்ளது. இதே போன்று, அவருக்கு பதிலாக காங்கிரஸ் சார்பில் மாற்று வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சுரேஷ் பத்ஷாலாவின் வேட்பு மனுவும் தகுதியற்றது என அறிவிக்கப்பட்டது. அவருடைய வேட்பு மனுவிலும் போலியான சாட்சி கையெழுத்துகள் இடம் பெற்றிருந்ததன என தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, இந்த வேட்பு மனு கலெக்டரால் ரத்து செய்யப்பட்டது. இதனால், போட்டியில் இருந்து காங்கிரஸ் கட்சி வெளியேறியது. இதனையடுத்து, சூரத் தொகுதியின் பா.ஜ.க. வேட்பாளர் முகேஷ் தலால் போட்டியின்றி வெற்றி பெற்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதனை குஜராத் பா.ஜ.க. தலைவர் சி.ஆர். பாட்டீல் நேற்று தெரிவித்து உள்ளார். அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், சூரத் மக்களவை தொகுதியில் போட்டியின்றி வெற்றி பெற்ற முகேஷ் தலாலுக்கு வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள் என்று தெரிவித்து உள்ளார்.

இந்த தொகுதிக்கான தேர்தலில், தலால் மற்றும் கும்பானி தவிர சுயேச்சைகள், பகுஜன் சமாஜ் கட்சியை சேர்ந்த பியாரேலால் பாரதி என 8 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். அவர்கள் அனைவரும் தங்களுடைய வேட்பு மனுக்களை நேற்று திரும்ப பெற்று விட்டனர். இதனால், தலால் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

# மாணிக்கம் தாகூரை தகுதி நீக்கம் செய்யக் கோரிய மனு தள்ளுபடி

**சென்னை, ஏப் 23-**

விருதுநகர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூரை தகுதி நீக்கம் செய்யக் கோரிய வழக்கை சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

நடந்து முடிந்த மக்களவை தேர்தலில் விருதுநகர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் மாணிக்கம் தாகூர் போட்டியிட்டார். இதனிடையே விருதுநகரைச் சேர்ந்த செல்வகுமார் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார். அந்த மனுவில்,

மாணிக்கம் தாகூரின் ஆதரவாளர்கள், தேர்தல் விதிகளை மீறி, வாக்காளர்களுக்கு டோக்கன்களை வினியோகித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக, கடந்த 14-ம் தேதி தேர்தல் ஆணையத்திற்கு புகார் அளித்துள்ளோம்.

எனவே அவரை தகுதி நீக்கம் செய்யவும், அவர் மீது நடவடிக்கை எடுக்கவும் தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த பின் தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி சத்தியநாராயண பிரசாத் அமர்வு பிறப்பித்த உத்தரவில்,

தேர்தல் ஆணையத்திற்கு புகார் அளித்த அடுத்த நாள் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ள நிலையில், அவர்களே நடவடிக்கை எடுப்பார்கள்.

இது சம்பந்தமாக மனுதாரர் தேர்தல் வழக்கு வேண்டுமானால் தாக்கல் செய்யலாம். இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கனவே வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்திற்கு அளித்த புகார் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கும். விளம்பர நோக்குடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறி, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# கம்யூ., சிந்தனையை செயல்படுத்த இந்தியா கூட்டணியினர் முயற்சி

## உ.பி.யில் பிரதமர் நரேந்திரமோடி பேச்சு



**அலிகார், ஏப் 23-**

மாவோயிஸ்ட், கம்யூனிஸ்டுகளின் சிந்தனையை இந்தியாவில் செயல்படுத்த இந்தியா கூட்டணியினர் முயற்சி செய்வதாக உத்தரப் பிரதேசத்தில் நடந்த கூட்டத்தில் பிரதமர் மோடி குற்றஞ்சாட்டியுள்ளார்.

உ.பி., மாநிலம் அலிகாரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது: கடந்த முறை நான் அலிகார் வந்தபோது, சமாஜ்வாதி மற்றும் காங்கிரஸின் வாரிசு அரசியல், ஊழல் போன்றவற்றிற்கு பூட்டு போடுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டேன். இன்றும் இரு கட்சிகளை சேர்ந்த இளவரசர்கள் அதன் சாவியைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு சக்திவாய்ந்த பூட்டை போட்டு விட்டீர்கள். காங்கிரஸ், சமாஜ்வாதி போன்ற கட்சிகள் எப்பொழுதும் திருப்திப்படுத்தும் அரசியலையே செய்து வருகின்றன. அவர்கள் முஸ்லிம்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக எதையும் செய்ததில்லை.

இந்த பகுதியில், முத்தலாக் கொடுமையால் பாதிக்கப்பட்ட பல மகளிர்களின் வாழ்க்கை சீரழிந்தது. முத்தலாக் காரணமாக, மகள், தந்தை, சகோதரர், குடும்பத்தினர் என அனைவரும் சிரமப்பட்டனர். தற்போது நாங்கள் முத்தலாக் சட்டத்தை இயற்றி அவர்களின் உயிருக்கு பாதுகாப்பு அளித்துள்ளோம். நாட்டு மக்களை நான் எச்சரிக்க விரும்புகிறேன். காங்கிரசும், இந்தியா கூட்டணியும் உங்களின் சம்பாத்தியம் மற்றும் உங்களின் சொத்துக்களில்தான் தங்கள் கண்களை வைத்துள்ளன.

தங்கள் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால், யார் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்பதை நாங்கள் விசாரிப்போம் என்று காங்கிரஸ் கூறுகிறது. நம் தாய்மார்களின் மற்றும் சகோதரிகளின் தங்கத்தை புனிதமாக கருதுகின்றனர். இப்போது இவர்களின் கண்கள் பெண்களின் தாலிகளின் மீது தான் இருக்கிறது. உங்களின் தங்கத்தை திருடுவது தான் இவர்களின் எண்ணம்.

உங்களது கிராமத்தில் நீங்கள் ஒரு வீடு வைத்திருந்து, உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக உங்கள் நகரத்தில் ஒரு சிறிய பிளாட் வாங்கியிருந்தால், அவர்கள் (இந்தியா கூட்டணி) இரண்டில் ஒன்றை எடுத்துச் செல்வார்கள். இது மாவோயிஸ்ட், கம்யூனிஸ்டுகளின் சிந்தனையாக இருக்கிறது. இதன் மூலம் அவர்கள் ஏற்கனவே பல நாடுகளை நாசமாக்கிவிட்டார்கள். இப்போது இதே கொள்கையைத்தான் காங்கிரஸ் கட்சியும் இந்தியாவில் செயல்படுத்த விரும்புகின்றன.

பா.ஜ., ஆட்சியால் இப்போது நமது உ.பி., தன்னிறைவு பெற்ற மாநிலமாக உருவெடுத்துள்ளது. சுதந்திரத்திற்கு பிறகு உ.பி.,யில் எந்த தொழில் வளர்ச்சியும் நடக்கவில்லை. ஆனால் யோகியின் ஆட்சி காலத்தில் தான், 'ஒரு மாவட்டம், ஒரே தயாரிப்பு' என்ற அவரது நோக்கம், புதிய அத்தியாயத்தை உருவாக்கி இருக்கிறது. இதுபோன்ற சகாக்கள் இருப்பது பெருமையாக உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

# கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமீன் கேட்டவருக்கு ரூ.75,000 அபராதம்

## டெல்லி ஐகோர்ட்டில் பொதுநல மனு தள்ளுபடி

**புது டெல்லி, ஏப் 23-**

கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமீன் வழங்க கோரி மனு தாக்கல் செய்தவருக்கு ரூ. 75 ஆயிரம் அபராதம் விதித்த டெல்லி ஐகோர்ட் அவரது பொதுநல மனுவையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மதுபானக் கொள்கை முறைகேடு வழக்குடன் தொடர்புடைய பண மோசடி வழக்கில் டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அமலாக்கத்துறை கைது செய்யப்பட்டதை எதிர்த்து டெல்லி ஐகோர்ட்டில் அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்திருந்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமீன் வழங்கக்கோரி சட்ட மாணவர் ஒருவர், வழக்கறிஞர் கரண்பால் சிங் மூலம் டெல்லி ஐகோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்தார்.

நாங்கள் இந்திய மக்கள் என்ற பெயரில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அந்த மனுவில், அனைத்து குற்ற வழக்குகளிலும் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமீன் வழங்க வேண்டும் என கூறியிருந்தார்.

கெஜ்ரிவாலை அவரது பதவிக்காலம் மற்றும் விசாரணை முடியும் வரை நிலுவையில் உள்ள அமலாக்கத்துறை மற்றும் சி.பி.ஐ.யால் பதிவு செய்யப்பட்ட அனைத்து கிரிமினல் வழக்குகளிலும் இடைக்கால ஜாமீனில் விடுவிக்க மனுதாரர் முயற்சித்துள்ளார் என்று கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தற்காலிக தலைமை நீதிபதி மன்மோகன் மற்றும் நீதிபதி மன்மீத் பிரீதம் சிங் அரோரா ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

அப்போது, மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதாடும் போது, சிறையில் கடுமையான குற்றவாளிகளுடன் கெஜ்ரிவால் அடைத்து வைக்கப்பட்டுள்ளதால் அவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகவும், அதனால் இடைக்கால ஜாமீன் வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஆனால், கெஜ்ரிவால் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ராகுல் மெஹ்ரா வாதிடும் போது, மனுதாரரின் கோரிக்கைகள் முற்றிலும் அனுமதிக்கப்பட முடியாதவை என்று கூறினார்.

சம்பந்தப்பட்ட நபர் (கெஜ்ரிவால்) விரும்பினால், ஜாமீன் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார். அப்படியிருக்கையில் அவருக்காக மனு தாக்கல் செய்ய இவர் யார்? இது ஒரு விளம்பர நோக்கம் கொண்ட வழக்கு, முற்றிலும் தவறானது என்றும் மெஹ்ரா குறிப்பிட்டார்.

கெஜ்ரிவாலுக்கு உங்கள் உதவி எதுவும் தேவையில்லை. அவர் திருப்தியாக இருக்கிறார். அவருக்கு உதவ நீங்கள் யார்? உங்கள் உதவி தனக்குத் தேவையில்லை என்று அவர் கூறுகிறார். அதை விட்டு விடுங்கள் என நீதிபதிகள் தெரிவித்தனர். அப்போது, முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கொண்ட கெஜ்ரிவால் இல்லாததால் கடந்த ஒரு மாதமாக அரசுப் பணிகள் பாதிக்கப்பட்டு, மக்கள் அவதிப்படுவதாக மனுதாரரின் வழக்கறிஞர் தெரிவித்தார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த மனு விசாரணைக்கு உகந்தது அல்ல எனக்கூறி தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். மேலும், மனுதாரருக்கு ரூ.75,000 அபராதம் விதித்து உத்தரவிட்டனர்.

ஆம் ஆத்மி கட்சித் தலைவர் கெஜ்ரிவால், தனது சட்டப்பூர்வ தீர்வுகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கான வழிமுறைகள் அவருக்கு இருக்கின்றன. கெஜ்ரிவால் சார்பாக மனு தாக்கல் செய்ய மனுதாரருக்கு எந்த அதிகாரமும் இல்லை.

மனுதாரர் சட்டக் கல்லூரியில் வகுப்புகளுக்கு செல்கிறாரா? அவர் சட்டக் கொள்கைகளைப் பின்பற்றவில்லை என்று இதிலிருந்து தெரிகிறது என்றும் நீதிபதிகள் கூறினர்.

## அருணாச்சல பிரதேசத்தில்

# எட்டு வாக்குச்சாவடிகளில் நாளை மறுவாக்குப்பதிவு

**புதுடெல்லி, ஏப். 23-**

அருணாச்சல பிரதேசத்தில் 8 வாக்குச்சாவடிகளில் நாளை மறுவாக்குப்பதிவு நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மணிப்பூரில் உள் மணிப்பூர், வெளி மணிப்பூர் என 2 மக்களவை தொகுதிகள் உள்ளன. இதில் உள் மணிப்பூர் மக்களவை தொகுதியில் முழுமையாகவும், வெளி மணிப்பூர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட 15 தொகுதிகளிலும் கடந்த 19 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. 69.18 சதவீதம் வாக்குப்பதிவாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால், அன்றைய தினம் கிழக்கு இம்பால் மாவட்டத்திலும், விஷ்ணுபூர் மாவட்டத்தில் உள்ள தமன்போக்கி பகுதிகளிலும் துப்பாக்கிச் சூடு நடந்தது. இதனால் அங்கே 11 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு பாதிக்கப்பட்டது. மேலும், கலவரத்தால் பாதிக்கப்பட்ட மேற்கு இம்பால் மற்றும் கிழக்கு இம்பால் ஆகிய இரண்டு மாவட்டங்களில் ஏப்ரல் 22-ம் தேதி (நேற்று) காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை மறுவாக்குப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, நேற்று காலை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்றது.இதேபோல், அருணாச்சலப் பிரதேசத்தில் வாக்குப்பதிவின் போது, மாநிலத்தில் வன்முறை நடந்தது. இதனால், 8 வாக்குச்சாவடிகளில் வாக்குப் பதிவு செல்லாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. மேலும், நாளை காலை 6 மணி முதல் மதியம் 2 மணி வரை மறுவாக்குப்பதிவு நடத்த உத்தரவிட்டு துணை தலைமைத் தேர்தல் அதிகாரி லிக்கன் கோயு ஒரு அறிக்கையில் தெரிவித்தார். சியாங் மாவட்டத்தில் உள்ள ரம்காங் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட போக்னே மற்றும் மோலோம் உள்ளிட்ட 8 இடங்களில் உள்ள வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப்பதிவு நடைபெறும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேரளாவில் கொளுத்தும் வெயில்:

# 10 மாவட்டங்களுக்கு வரும் 25-ம் தேதி வரை மஞ்சள் எச்சரிக்கை

**திருவனந்தபுரம், ஏப் 23-**

கேரளாவில் வெயில் தாக்கம் அதிகரித்து வருவதால் அம்மாநிலத்தில் 10 மாவட்டங்களுக்கு வரும் 25-ம் தேதி வரை மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் கோடை காலம் தொடங்குவற்கு முன்னதாகவே வெயில் சுட்டெரித்தது. இந்த நிலையில் ஏப்ரல் மாதம் தொடங்கியதில் இருந்து வெயிலின் தாக்கம் மேலும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக பாலக்காடு உள்ளிட்ட சில மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை பதிவானது. கடுமையான வெப்பம் காரணமாக கடவுளின் தேசம் என்று அழைக்கப்படும் கேரளத்து மாநில மக்கள் தவிப்புக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில், பத்தினம் திட்டா, எர்ணாகுளம், கண்ணூர், ஆலப்புழா, கோட்டயம் மலப்புரம், கொல்லம், திருச்சூர், கோழிக்கோடு, பாலக்காடு ஆகிய மாவட்டங்களுக்கு வரும் 25-ம் தேதி வரை மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருச்சூர் மற்றும் கொல்லம் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை பதிவாகும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கேரளாவில் பாராளுமன்ற தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ள நிலையில், கோடை வெப்பம் ஒருபக்கம் வாட்டி வதைத்து வருகிறது. கடும் வெப்பத்திற்கு மத்தியிலும் வேட்பாளர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். கேரளாவில் வரும் 26-ம் தேதி பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# அதிகரிக்கும் வெயில் எதிரொலி: குளிர்ச்சியாக சாப்பிட்டால் நோய் தொற்று ஏற்பட வாய்ப்பு

## பொது சுகாதாரத்துறை எச்சரிக்கை

**சென்னை, ஏப். 23-**

கோடை காலத்தில் அதிகரிக்கும் வெயிலால் குளிர்ச்சியாக சாப்பிட்டால் பாக்டீரியாக்கள் மற்றும் கொசுக்கள் மூலமாக பலருக்கு நோய்த் தொற்று பாதிப்பு ஏற்படுவதாக பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. இதனால் பொது மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இன்னும் வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில், கோடை காலத்தில் பாக்டீரியாக்கள் மற்றும் கொசுக்கள் மூலமாக பலருக்கு நோய்த் தொற்று பாதிப்பு ஏற்படுவதாக பொது சுகாதாரத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது., கோடைகாலத்தில் குளிர்ச்சியாக சாப்பிடும் போது சில நேரங்களில் தொண்டை வலி ஏற்படலாம். அதை அலட்சியப்படுத்தினால்அது ஸ்ட்ரெப்டோகாக்கஸ் வகை பாக்டீரியா தொற்றுக்கு வழிவகுத்து ரூமாட்டிக் காய்ச்சல் ஏற்படலாம். இது மூட்டு – இணைப்புத் திசு, தோல் மற்றும் மூளையை பாதிக்கும்.

இதற்கு உரிய சிகிச்சை எடுக்காவிட்டால் இதயம் மற்றும் சிறுநீரக பாதிப்பும் ஏற்படக்கூடும். தொண்டையில் வலி ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும். கோடை காலத்தில் நோய்களை பரப்பும் கொசுக்களும் பெருக்கமடைகின்றன. இதனால் கோடை காலத்தில் தண்ணீரை சேமித்து வைக்கும் போது முறையாக மூடி வைக்காமல் இருந்தால், நன்னீரில் வளரக்கூடிய, 'ஏடிஸ்' கொசுக்கள் உருவாகக்கூடும். குடிநீரை காய்ச்சி பிறகு குளிர்வித்து பருகலாம். இதன் மூலம், டெங்கு, டைபாய்டு, மூளைக் காய்ச்சல் மற்றும் எலிக் காய்ச்சலில் இருந்து தற்காத்து கொள்ள முடியும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## இன்சுலின் மறுக்கப்படுவதாக புகார்:

# கெஜ்ரிவாலுக்கு ஆதரவாக திகார் சிறை முன் ஆம் ஆத்மி கட்சியினர் போராட்டம்

**புதுடெல்லி, ஏப். 23-**

அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இன்சுலின் வழங்கக் கோரி டெல்லி திகார் சிறை முன்பு ஆம் ஆத்மி கட்சியினர் போராட்டம் நடத்தினர்.



டெல்லி மதுபான கொள்கை வழக்கில் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சர்க்கரை நோயாளியான கெஜ்ரிவாலுக்கு இன்சுலின் வழங்க நீதிமன்றம் அனுமதி அளித்தும் சிறை நிர்வாகம் அதை வழங்கவில்லை என்றும், இதன் மூலம் கெஜ்ரிவாலை கொல்ல சதி நடப்பதாகவும் ஆம் ஆத்மி கட்சி தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

இந்த நிலையில் கெஜ்ரிவாலுக்கு இன்சுலின் வழங்கக் கோரி திகார் சிறை முன்பு ஆம் ஆத்மி கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டெல்லி நிதி அமைச்சர் அதிஷி, ஆம் ஆத்மி எம்.எல்.ஏ. சஞ்சீவ் ஜா உள்பட கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும், ஏராளமான கட்சி தொண்டர்களும் இந்த போராட்டத்தில் பங்கேற்றனர்.

அவர்கள் 'கெஜ்ரிவாலுக்கு இன்சுலின் கொடுங்கள்' என்பது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி போராடினர்.

போராட்டத்தின்போது பத்திரிகையாளர்களிடம் பேசிய அதிஷி, "இது போராட்டம் அல்ல. சர்க்கரை நோயாளியாக உள்ள முதலமைச்சர் கெஜ்ரிவாலின் உடல்நிலை குறித்து டெல்லி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

தங்களிடம் சிறப்பு டாக்டர்கள் இருப்பதாக திகார் நிர்வாகம் கூறியது. ஆனால் அவர்கள் நீரிழிவு டாக்டர் கேட்டு எய்ம்ஸ்-க்கு கடிதம் எழுதியுள்ளனர். கெஜ்ரிவால் கிட்டத்தட்ட 20 நாட்களாக நீதிமன்றக் காவலில் இருக்கிறார். ஆனால் அவர்கள் இப்போதுதான் நீரிழிவு நிபுணரைக் கேட்கிறார்கள். இது ஒரு சதி இருப்பதைக் காட்டுகிறது. அவரது சர்க்கரை அளவு அதிகமாக உள்ளது. அவருக்கு இன்சுலின் மறுப்பது அவரது ஆரோக்கியத்திற்கு ஆபத்தானது" என்றார்.

# சென்னை - சேலம் விமான சேவை நேரம் மாற்றம்

**சென்னை, ஏப் 23-**

சென்னை விமானநிலையத்துக்கு மதிய நேரத்தில் சேலத்தில் இருந்து இயக்கப்பட்டு வந்த தனியார் ஏர்லைன்ஸ் விமான சேவையின் நேரம் மாலை நேரத்துக்கு மாற்றப்பட்டு உள்ளது.

சென்னை விமானநிலையத்தின் உள்நாட்டு முனையத்தில் இருந்து நாள்தோறும் காலை 10.35 மணியளவில் இன்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் புறப்பட்டு, காலை 11.40 மணிக்கு செல்கிறது. பின்னர், அங்கிருந்து அதே விமானம் மதியம் 12.40 மணியளவில் புறப்பட்டு, மதியம் 1.50 மணியளவில் சென்னை வந்து சேருவது வழக்கம்.

இந்த விமானத்தில் பயணிகளின் கூட்டம் அதிகரித்ததால், சென்னை-சேலத்துக்கு இடையே கூடுதல் விமான சேவையை இயக்க வேண்டும் என்று பயணிகள் வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில், சேலத்தில் இருந்து மதியம் சென்னைக்கு புறப்பட்டு வரும் இன்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தின் நேரம், நேற்று முதல் மாலை நேரத்துக்கு மாற்றி அமைக்கப்பட்டு உள்ளது.


இதன்படி, சேலத்தில் இருந்து மாலை 5 மணியளவில் புறப்படும் இன்டிகோ ஏர்லைன்ஸ் விமானம், மாலை 6 மணியளவில் சென்னை உள்நாட்டு விமான முனையத்துக்கு வந்து சேரும். இதனால், மதிய நேரத்தில் சேலம்-சென்னை இடையே இயக்கப்பட்டு வந்த விமான சேவை ரத்து செய்யப்பட்டு, மாலை நேரத்துக்கு மாற்றப்பட்டு உள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



**சொ**த்துக்களை கொள்ளையடித்து முஸ்லிம்களுக்கு கொடுத்து விடுவார்கள் என்கிற பிரதமரின் பேச்சு மிகவும் நாகரிகமற்ற ஒன்றாகும். காங்கிரஸ் கட்சி உங்கள் சொத்துக்கள் அனைத்தையும் எடுத்து முஸ்லிம்களுக்கு கொடுக்கப் போகிறது என்று பிரதமர் மோடியால் எப்படி சொல்ல முடிகிறது? இது ஒரு அப்பட்டமான வகுப்புவாதத்தை தூண்டும் பேச்சு.

**- சசிதரூர்**



**பி**ரதமர் மோடியின் ஆட்சியில் ரயிலில் பயணம் செய்வது தண்டனையாகி விட்டது. ரயிலில் பொதுப்பெட்டிகளை குறைத்து, எலைட் ரயில்களை மட்டுமே ஊக்குவிக்கும் மோடி ஆட்சியில் அனைத்து தரப்பு பயணிகளும் துன்புறுத்தப்படுகிறார்கள். பணம் கொடுத்து டிக்கெட் பெற்றாலும் அவர்களால் இருக்கைகளில் அமர்ந்து செல்ல முடிவதில்லை.

**- ராகுல் காந்தி**



**பா**ராளுமன்ற மக்களவைத் தேர்தலில் 400 இடங்கள் அல்லது 500 இடங்கள் என பா.ஜ.க. சொந்தம் கொண்டாடி வருகிறது. ஆனால் இம்முறை இந்தியா கூட்டணியின் சக்தி மிகவும் உறுதியாகவுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, இந்தியா கூட்டணியின் சக்திக்கு முன் ஒன்றும் செய்ய முடியாது.

**- மல்லிகார்ஜுன கார்கே**



**ம**து இல்லாத தமிழகத்தில் குடும்பங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்; குழந்தைகள் சுயமரியாதையுடன் நல்லவர்களாக வளர்வார்கள். எனவே, குடியைக் கெடுக்கும் குடிப்பழக்கத்திற்கு முடிவு கட்டும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள மதுக்கடைகளை மூடிவிட்டு முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**- ராமதாஸ்**

# சினிமா CINI செய்திகள்

## நெவர் எஸ்கேப் - விமர்சனம்



திரையரங்கம் ஒன்றில் அமானுஷ்ய சம்பவங்கள் நடப்பதாக நம்பும் மக்கள் அந்த பக்கமே போவதற்கு பயப்படுகிறார்கள். மக்களின் இத்தகைய பயத்தை போக்கி, திரையரங்கிற்குள் நடப்பதாக சொல்லப்படும் அமானுஷ்ய விஷயங்கள் பொய்யானவை என்று நிரூபிப்பதற்காக யூடியூப் சேனல் குழுவினர் அந்த திரையரங்கிற்குள் நுழைகிறார்கள். அதே சமயம், போலீஸிடம் இருந்து தப்பித்து வரும் சிலர் பதுங்குவதற்காக அந்த திரையரங்கிற்குள் நுழைகிறார்கள். இவர்களுக்கு திரையரங்க உரிமையாளரான ராபர் டிக்கெட் கிழித்து கொடுத்து உள்ளே அனுப்புகிறார்.

திரையரங்கிற்குள் சென்றவர்கள் சில நிமிடங்களில் அங்கு ஏதோ அமானுஷ்ய விஷயங்கள் நடப்பதை உணர்கிறார்கள். உடனே அங்கிருந்து அவர்கள் தப்பிக்க முயற்சிக்க, அது முடியாமல் போகிறது. இறுதியில் அவர்கள் அங்கிருந்து தப்பித்தார்களா? இல்லையா?, திரையரங்கிற்குள் இருக்கும் அமானுஷ்யத்தின் பின்னணி என்ன? என்பது தான் 'நெவர் எஸ்கேப்' படத்தின் கதை. ஏற்கவே இதுபோன்ற பாணியில் வெளியான சில படங்கள் ரசிகர்களின் நினைவுக்கு வரக்கூடாது என்பதற்காக வித்தியாசமான முறையில் திரைக்கதை மற்றும் காட்சிகளை நகர்த்துவதில் மெனக்கெட்டிருக்கும் இயக்குநர் ஸ்ரீ டி அரவிந்த் தேவராஜ், திரைக்கதையின் வேகத்தை அதிகரிக்கச் செய்திருந்தால் ரசிகர்களிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய படமாக அமைந்திருக்கும். மொத்தத்தில், 'நெவர் எஸ்கேப் ஒருமுறை பார்த்து ரசிக்கலாம்.

## இயக்குனர் ஷங்கரின் மூத்த மகள் ஐஸ்வர்யா ஷங்கர் திருமண வரவேற்பு



இந்திய திரையுலகின் பிரமாண்ட இயக்குனர் ஷங்கரின் மூத்த மகள் ஐஸ்வர்யா ஷங்கர் - தருண் கார்த்திகேயன் திருமண வரவேற்பு நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது. பல முக்கிய பிரபலங்கள் சூழ நடைபெற்ற இந்த திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பிரபல பாலிவுட் நடிகர் ரன்வீர் சிங் நடனமாடி மணமக்களை உற்சாகப்படுத்தினார்.

டிரம்ஸ் சிவமணி இசைக்க நடனமாடிய ரன்வீர் சிங்குடன் மணமக்கள் ஐஸ்வர்யா ஷங்கர் - தருண் கார்த்திகேயன், அதிதி ஷங்கர், அர்ஜித் ஷங்கர், இயக்குனர் அட்லி ஆகியோர் நடனமாடினர்.

## ஒரு நொடி - இசை வெளியீடு



தமன்குமார் கதையின் நாயகனாக முதன்மையான வேடத்தில் நடித்திருக்கும் 'ஒரு நொடி' எனும் திரைப்படத்தின் இசை வெளியீடு சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. இதன் போது நடிகரும், சமூக செயற்பாட்டாளருமான ஆரி அர்ஜுனன் படத்தின் இசையை வெளியிட, தயாரிப்பாளர் சி. வி. குமார், நடிகரும், அரசியல் வாதியும், இலக்கியவாதியுமான பழ. கருப்பையா, எழுத்தாளரும், நடிகருமான வேல. ராமமூர்த்தி உள்ளிட்ட பட குழுவினர் பெற்றுக் கொண்டனர்.

## நடிகர் விஷாலுடன் மூன்றாவது படம்



ஸ்டோன்பெஞ்ச் ஃபிலிம்ஸ் மற்றும் ஜீ ஸ்டுடியோஸ் சவுத் நிறுவனங்கள், இன்வீனியோ ஆரிஜன் உடன் இணைந்து தயாரிக்கும், நடிகர் விஷால் மற்றும் இயக்குநர் ஹரி இணைந்துள்ள 'ரத்னம்' திரைப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது விழாவில்

இயக்குநர் ஹரி பேசியதாவது...

"இது எனது 17வது படம், விஷாலுடன் மூன்றாவது படம். விஷால் தயாரிப்பாளர் கார்த்திக்கை அறிமுகப்படுத்தினார், அந்த கம்பெனியில் கார்த்திக் சுப்பராஜ் இருந்தார், ஒரு இயக்குநர் இருக்கும் கம்பெனியில் வேலை பார்ப்பது சுவாரஸ்யமாக இருந்தது. இந்தப்படம் இந்தக்கால ஆடியன்ஸுக்கு பிடிக்கும் வலையில் 60% ஆக்சன் 40% கமர்ஷியலாக இருக்கும்.

விஷால் ஆக்ஷன் செய்வார், ஆனால் எமோஷனிலும் அசத்தியுள்ளார். எல்லா ஆர்டிஸ்டும் நன்றாக வேலை பார்த்துள்ளனர். சிங்கிள் ஷாட் பற்றி எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரே ஷாட்டில் எட்டு சீக்குவன்ஸ், நான்கு ஸ்டண்ட் மாஸ்டர்கள் செய்துள்ளனர். எனக்கு எதார்த்தம் இருக்கனும்னு ஆசைப்படுவேன், ஏன் வைத்தார் என யாரும் கேட்கக் கூடாது. அந்த எண்ணத்தில் தான் உழைத்து உருவாக்கியுள்ளோம். 3.5 கிமீ தூரத்திற்கு நான்கு இடங்களில் மாறி மாறி ஹீரோ ஹீரோயினோடு போய் ஆக்ஷன் செய்துள்ளார், இது செய்யவே முடியாது என்றார்கள். வெற்றிமாறன், ரஞ்சித் எல்லாம் ராவாக தருகிறார்கள். அது மாதிரி செய்ய ஆசைப்பட்டேன். விஷால் உழைத்து தந்தார். அனைவரும் ஒத்துழைப்பு தந்தனர். ஒரு நாள் முழுக்க ரிகர்சல் பார்த்து மூன்றாவது ஷாட்டில் எடுத்து முடித்த போது தான் நிம்மதியாக இருந்தது. ஆடியன்ஸை மதித்து படம் எடுத்துள்ளோம். பார்க்கும் போது உங்களுக்கு ஒரு புது அனுபவமாக இருக்கும். நன்றி.

## பத்திரிகையாளர்களுடன் பிறந்த நாளை கொண்டாடிய நடிகர் வசந்த் ரவி



என்னுடைய பிறந்தநாள் வருகிற ஏப்ரல் 18ஆம் தேதி என்னுடைய முதல் படம் 'தரமணி'யில் இருந்து எனக்கு ஆதரவு கொடுத்து வரும் மீடியா மற்றும் பத்திரிக்கை நண்பர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். அழைப்பை ஏற்று வந்தவர்கள் அனைவருக்கும் நன்றி நீங்கள் கொடுத்த நிறை, குறைகள்தான் என்னை இந்த அளவுக்கு வளர்த்து கொண்டு வந்திருக்கிறது. நிறைய பேர் என்னிடம் 'எப்போது ஜாலியான படம் செய்வீர்கள்? டான்ஸ் ஆடுவீர்கள்?' என்றெல்லாம் கேட்பீர்கள். அதற்கான பதிலாகதான் ஜியோ சினிமாவில் வெளியாகி இருக்கும் 'பொன் ஒன்று கண்டேன்' படம் வந்திருக்கிறது. நான் நடிகராக வேண்டும் என்று முடிவு செய்தவுடன் ரஜினி சாரிடம் சென்று தான் அட்வைஸ் கேட்டேன். அதன் பின்பு அவருடனேயே 'ஜெயிலர்' படத்தில் நடித்தது எனக்கு மிகப்பெரிய பெருமை. 'உன்னைப் போன்ற நடிகருடன் சேர்ந்து நடித்ததில் எனக்குப் பெருமை' என்று ரஜினி சார் சொன்னார். அது உண்மையிலேயே பெரிய விஷயம் அடுத்து 'வெப்பன்' என்ற ஆக்ஷன் படத்திலும், 'இந்திரா' என்ற டார்க் ஜானர் படத்திலும் நடித்திருக்கிறேன். இரண்டுமே நன்றாக வந்திருக்கிறது.

## ஃபைண்டர் - விமர்சனம்




குற்றவியல் பட்டம் பெறும் நாயகன் வினோத் ராஜேந்திரன், தனது நண்பர்களுடன் சேர்ந்து 'ஃபைண்டர்' என்ற துப்பறியும் நிறுவனத்தை தொடங்குகிறார். அந்நிறுவனம் மூலம், குற்றம் செய்யாமல் சிறையில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் அப்பாவிகளை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடும் அவரிடம், கொலை வழக்கு ஒன்றில் கொற்றவாளியாக்கப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் சார்லியின் வழக்கு வருகிறது. குற்றமற்ற சார்லியை காப்பாற்ற களத்தில் இறங்கும் நாயகனின் பரபரப்பான துப்பறியும் பயணம் தான் 'ஃபைண்டர்'.

முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் சார்லி, படத்தின் அடையாளமாக இருப்பதோடு, தனது நடிப்பின் மூலம் பலமாகவும் பயணித்திருக்கிறார். குடும்ப கஷ்டத்திற்காக செய்யாத குற்றத்திற்காக சிறைக்கு செல்லும் அவர் தான் ஏமாற்றப்பட்டிருப்பதை அறிந்து கலங்கும் இடங்கள் அருமை .

படத்தின் ஆரம்பக் காட்சியிலேயே குற்றவியல் துறை மாணவர்கள் அத்துறைப்பற்றி கூறும் தகவல்கள் மூலம் ரசிகர்களின் கவனத்தை ஈர்ப்பவர், கொலை வழக்கின் மர்மங்களை தேடி செல்லும் நாயகனின் துப்பறியும் பயணத்தை பரபரப்பாக மட்டும் இன்றி திரில்லிங்காகவும் நகர்த்தி சென்று ரசிகர்களை சீட் நுணியில் உட்கார வைத்துவிடுகிறார்.

மொத்தத்தில், 'ஃபைண்டர்' சஸ்பென்ஸ் திரில்லர் படம். அனைவரும் பார்க்கலாம்.


## சைக்காலஜிக்கல் திரில்லர் 'சபரி'



இயக்குநர் அனில் கட்ஸ் இயக்கத்தில், மஹா மூவீஸ் தயாரிப்பில் நடிகை வரலக்ஷ்மி சரத்குமார் நடித்த 'சபரி' திரைப்படம் மே 3, அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகத் தயாராக உள்ளது. இந்தப் பல மொழித் திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் வெளியாகிறது. படத்தில் வரலக்ஷ்மி சரத்குமார், கணேஷ் வெங்கட்ராம், ஷஷாங்க், மைம் கோபி, சுனைனா, ராஜஸ்ரீ நாயர், மதுநந்தன், ரஷிகா பாலி (பம்பாய்), 'விவா' ராகவா, பிரபு, பத்ரம், கிருஷ்ண தேஜா, பிந்து பகிடிமரி போன்ற பல கலைஞர்கள் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இவர்களோடு அஷ்ரிதா வேமுகந்தி, ஹர்ஷினி கொடுரு, அர்ச்சனா ஆனந்த், பிரமோதினி பேபி நிவேக்ஷா, பேபி கிருத்திகா மற்றும் பலரும் உள்ளனர்.

## பாரதிராஜா, நட்டி, ரியோராஜ், சாண்டி இணைந்து நடிக்கும், "நிறம் மாறும் உலகில்"



நான்கு விதமான வாழ்க்கை, நான்கு கதைகள் அதை இணைக்கும் ஒரு புள்ளி, என நம் வாழ்வின் உறவுகளின் அவசியத்தை, உணர்வுகளை பேசும் அழகான படமாக இப்படம் உருவாகியுள்ளார் அறிமுக இயக்குநர் பிரிட்டோ JB. தற்போது வெளியாகியிருக்கும் ஃபர்ஸ்ட் லுக் இரத்தம் பாயும் கரும் சிவப்பு நிற பின்னணியில், துப்பாக்கி, ஆட்டோ, கண்ணாடி, ஹவுஸிங் போர்ட் பின்னணி, ஒரு பெண்ணின் நிழல் முகம், என குறியீடுகளுடன், கதாபாத்திரங்களின் வித்தியாசமான தோற்றத்தில் பாத்தவுடனே இதயத்தை உருக்கும் விதமாக அமைந்துள்ளது. பாரதிராஜா, நட்டி, ரியோராஜ், சாண்டி என ஒவ்வொருவரின் லுக்கும் இதுவரையிலும் அவர்களை பார்த்திராத வகையிலான தோற்றத்தில் மிரட்டுகிறது. வித்தியாசமான இந்த ஃபர்ஸ்ட் லுக் திரைப்பட ஆர்வலர்களிடம் பெரும் வரவேற்பைக் குவித்து வருகிறது.

## திருமங்கலம் பகுதியில் நொங்கு-பதநீர் சீசன் துவக்கம்: பனைத் தொழிலாளர்கள்-பொதுமக்கள் மகிழ்ச்சி

**திருமங்கலம்.ஏப்ரல்.23.**

கோடைகாலம் முன்கூட்டியே துவங்கியுள்ள நிலையில் மதுரை மாவட்டம் திருமங்கலம் பகுதியில் தற்போது பதநீர் மற்றும் நொங்கு சீசன் துவங்கியுள்ளதை தொடர்ந்து பனைத் தொழிலாளர்கள், வியாபாரிகள் மட்டுமின்ற பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட மேலப்பட்டி,கீழப்பட்டி, கட்ராம்பட்டி, உலகாணி, செங்கப்படை,சுங்குராம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு பனை மரங்கள் உள்ளது.இதனால் இந்த பகுதிகளில் பனைமரத்தை நம்பி வாழ்ந்திடும் தொழிலாளர்களும் அதிகமாக உள்ளனர்.

கோடைகாலத்தில் இங்குள்ள பனைமரங்களிலிருந்து கி டைத்திடும் பதநீர் மற்றும் நொங்கு மிகவும் ருசியாக இருப்பதால் தற்போது அதற்கு கிராக்கி அதிகமாக உள்ளது.

இதனிடையே இந்த ஆண்டு கோடைவெயில் துவங்கவுள்ள நிலையில் பதநீர் சீசன் வழக்கம் போல் துவங்கியுள்ளது.பதநீர் சீசன் ஆரம்பநிலையில் உள்ளதால் திருமங்கலம் பகுதியில் விற்பனை செய்யப்படும் தூய பதநிரின் விலை தாறுமாறாக உயர்ந்து காணப்படுகிறது. தற்போது கோடை காலம் துவங்கவுள்ள நிலையில் 1லிட்டர் பதநீர் ரூ.50 முதல் 60 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

என்றாலும் திருமங்கலம் பகுதி பதநீரின் ருசி அபாரமாக இருப்பதன் காரணமாக பதநீர் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டாலும் அதனை பொதுமக்கள் போட்டி போட்டு வாங்கிச் சென்று அருந்தி மகிழ்கின்றனர்.அதே போல் நொங்கு விற்பனையும் கடந்த சில நாட்களாக களைகட்டி வருகிறது.கோடை வெப்பத்தை தணித்திடும் வகையில் திருமங்கலம் நகரின் வீதிகளில் ஒரு நொங்கு ரூ.5 என அமோக விற்பனையாகி வருகிறது.தினம் தோறும் அதிகாலை நேரம்முதல் இறக்கப்படும் பதநீர் சிறிது நேரத்தில் விற்பனையாகி விடுவதாவும், பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுவது போக மீதமுள்ள பதநீர் பனை பொருள் வாரிய சொசைட்டிக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் பனைத் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

பாரம்பரிய சுவைகளை மறந்திடாத மக்கள் தற்போது உடலுக்கு குளிர்ச்சி தரும் பதநீரை மட்டையில் வாங்கி அதனுடன் நொங்கு சேர்த்து அருந்திட அதிகளவு ஆர்வம் காட்டி வருவதால் பதனீர் மற்றும் நொங்கு விற்பனை களைகட்ட ஆரம்பித்துள்ளது.இதனால் திருமங்கலம் தொகுதியில் பனை மரங்களை நம்பி பிழைப்பு நடத்திடும் பனை மரமேறிடும் தொழிலாளர்களும் பதநீர், நொங்கு வியாபாரிகளும் மகிழ்ச்சியியடைந்துள்ளனர். அதே சமயம் கோடைகாலம் உச்சத்தை எட்டும் சமயத்தில் பதநீருடன் சேர்ந்து நுங்கு விற்பனையும் அதிகரித்து தங்களது வாழ்வில் ஒளியேற்றி வைத்திடும் என்பதே பனை மரமேறிடும் தொழிலாளர்கள் நம்பிக்கையாக உள்ளது.

## 2026 சட்டசபை தேர்தலில் போட்டி: நடிகர் விஷால் திடீர் அறிவிப்பு

**சென்னை, ஏப். 23-**

2026ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவேன் என நடிகர் விஷால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நடிகர் விஷால் சேலம் மாவட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது: "வரும் 2026ம் ஆண்டு அரசியலுக்கு வருவேன். இந்த கட்சியுடன் கூட்டணி, இந்த கட்சியுடன் இத்தனை சீட்டுகள் ஒதுக்கீடு என்பதை யோசிக்க கூடாது. மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று யோசித்தால் அதற்காக மட்டும் தான் அரசியல் கட்சி தொடங்கி செயல்பட வேண்டும். ஆட்சியில் உள்ளவர்கள் மக்களுக்கு நல்லது செய்துவிட்டால் நாங்கள் நடித்துவிட்டு சென்றுவிடுவோம். கிராமப்புறங்களில் மக்களுக்கான நலதிட்டங்கள் முழுமையாக கிடைப்பது இல்லை. திமுக, அதிமுக செயல்பாடு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. எந்த கட்சியை சார்ந்தவராக இருந்தாலும் அடிப்படை வசதிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தமிழ்நாட்டில் மாற்றம் என்பது நிச்சயம் தேவைப்படுகிறது. மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்தால், என்னைப் போன்ற வாக்காளர்கள் வாக்களித்துவிட்டு எங்கள் தொழிலை பார்த்துக் கொண்டு சென்று விடுவோம். மேலும், புதிதாக கட்சி தொடங்குவதில் ஆர்வம் காட்ட மாட்டோம் என்றார். மேலும், நடிகர் சங்க கட்டிடத்திற்கு விஜயகாந்த் பெயர் வைப்பீர்களா என்ற செய்தியாளர்கள் கேள்விக்கு நடிகர் விஷால் கூறியதாவது : நடிகர் சங்க பொதுக்குழுவில் மட்டும் தான் முடிவெடுக்க முடியும். முக்கிய நிர்வாகிகள் உள்ளனர் அவர்களுடன் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்" இவ்வாறு நடிகர் விஷால் தெரிவித்தார்.

## சிறகன் - விமர்சனம்



அடுக்குமாடி குடியிருப்பில் பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்படுகிறார். கொலை வழக்கை காவல்துறை விசாரித்துக் கொண்டிருக்கும் போது, அதே பகுதியில் மகனை தொலைத்துவிட்டு தேடிக் கொண்டிருக்கும் எம்.எல்.ஏ ஜீவா ரவியும் அவருடன் இருந்த ஜூனியர் வழக்கறிஞர் சானுவும் கொலை செய்யப்படுகிறார்கள். இருவரின் கொலை வழக்கு தொடர்பாக பிரபல வழக்கறிஞர் கஜராஜ் மீது காவல்துறைக்கு சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால், சப்-இன்ஸ்பெக்டர் வினோத் ஜிடி கஜராஜை விசாரிக்கையில் அவர் குற்றமற்றவர் என்பது தெரிய வருகிறது. இதையடுத்து, மூன்று கொலைகள் பற்றி விசாரிக்கும் சப்-இன்ஸ்பெக்டர் வினோத், அவ்வபோது மறைந்த தனது தங்கையின் நினைவால் தடுமாறுகிறார். இப்படி பல கதாபாத்திரங்களை சுற்றி வரும் இந்த கொலை வழக்குகளின் பின்னணி என்ன?, எதற்காக இந்த கொலைகள் நடந்தது?, கொலையாளி யார்? என்பதை பல திருப்பங்களோடு சொல்வது தான் 'சிறகன்'.

சுயநினைவின்றி கோமாவில் இருக்கும் தனது மகளின் இத்தகைய நிலைக்கு காரணமானவர்களை பழிவாங்க துடிக்கும் கஜராஜ், தனது வயதுக்கு ஏற்ற முதிர்ச்சியை நடிப்பிலும் வெளிப்படுத்தி மனதில் நிற்கிறார். மகளின் நிலையைப் பார்த்து கோபம் கொண்டாலும் தனது செயலில் நிதானத்தை வெளிப்படுத்தி அவர் காட்டும் புத்திசாலித்தனம் திரைக்கதைக்கு மிகப்பெரிய பலம் சேர்த்திருக்கிறது. மொத்தத்தில், 'சிறகன்' சிறகடித்து பறக்கிறது

## வல்லவன் வகுத்ததடா -விமர்சனம்




நல்லவங்கள ஆண்டவன் சோதிப்பான் ஆனா கைவிட மாட்டான், கெட்டவங்களுக்கு ஆண்டவன் நிறைய கொடுப்பான் ஆனா கைவிட்டுருவான்" என்ற வாக்கியத்தை வைத்துக்கொண்டு இயக்குநர் விநாயக் துரை, அமைத்திருக்கும் சுவாரஸ்யமான திரைக்கதை மற்றும் அதை ஹைபர் லிங்க் முறையில் சொன்ன விதம் படத்தை ரசிக்க வைக்கிறது

என்ன செய்தாலும் பரவாயில்லை, எப்படிப்பட்ட தவறுகள் செய்தாலும் பராவயில்லை பணம் தான் முக்கியம் என்று பயணிக்கும் ஐந்து பேர் பொருளாதார ரீதியாக நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆனால், மற்றவர்களுக்கு உதவி செய்வதோடு, நேர்மையாக வாழ வேண்டும் என்று நினைக்கும் ஒருவர் வாழ்க்கையில் அனைத்தையும் இழந்ததோடு, மேலும் மேலும் துன்பப்படும் நிலைக்கு தள்ளப்படுகிறார்.

நல்லது செய்தால் நல்லது நடக்கும்" என்ற விசயத்தை கருவாக வைத்துக் கொண்டு, 6 கதாபாத்திரங்களை சுற்றி நடக்கும் கதையை ஹைபர் லிங்க் பாணியில் சொல்வது தான் 'வல்லவன் வகுத்ததடா'.

இந்த ஆறு பேரும் ஒருவருக்கொருவர் தொடர்பில்லாதவர்கள் என்றாலும் பணம் இவர்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துகிறது. அதனால் இவர்களின் வாழ்க்கையில் எப்படிப்பட்ட மாற்றங்கள் ஏற்படுகிறது என்பதை, விறுவிறுப்பாக மட்டும் இன்றி, படம் பார்ப்பவர்களின் முழு கவனத்தையும் இரண்டு மணிநேரத்திற்கு ஆட்கொள்ளும் வகையில் சுவாரஸ்யமாக சொல்லியிருக்கிறார் அறிமுக இயக்குநர் விநாயக் துரை.

மொத்தத்தில், இந்த 'வல்லவன் வகுத்ததடா' ரசிகர்களை கொண்டாட வைத்திருக்கிறது.

# திருமருகல் ரத்தினகிரீஸ்வரர் கோயில் தேரோட்டம்

## திரளான பக்தர்கள் வடம் பிடித்தனர்



**நாகப்பட்டினம்**

நாகை மாவட்டம் திருமருகல் ரத்தினகிரீஸ்வரர் கோயிலில் திங்கள் கிழமை நடைபெற்ற தேரோட்டத்தில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்தனர்.

திருமருகலில் ரத்தினகிரீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் காவிரி தென்கரைத் தலங்களில் 80-வது சிவத்தலமாகும். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் பாடல் பெற்ற இந்த கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் திருவிழா நடைபெறுவது வழக்கம்.

அதன்படி இந்த ஆண்டு சித்திரை திருவிழா கடந்த மாதம் 14-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவை முன்னிட்டு பல்வேறு வாகனங்களில் பஞ்சமூர்த்திகள் வீதி உலா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.விழாவின் முக்கிய நிகழ்ச்சியான செட்டிப்பெண், செட்டிப்பிள்ளை திருக்கல்யாண உற்சவம் சனிக்கிழமை இரவு நடைபெற்றது. தொடர்ந்து நேற்று பஞ்சமூர்த்திகள் திருத்தேரில் எழுந்தருளி தேரோட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் திருப்புகலூர் திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் 18-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள் மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து தேரை வடம் பிடித்து இழுத்தனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஒன்றியக்குழுக் தலைவர் ஆர்.ராதாகிருட்டிணன், கோவில் செயல் அலுவலர் அசோக்ராஜா,தக்கார் தனலெட்சுமி,கணக்கர் சீனிவாசன், திருப்பணி குழுவினர் மற்றும் கோவில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு பணிகளை கலெக்டர் மா.பிரதீப் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

### நாகப்பட்டினம் மாவட்டம்

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் என் கல்லூரி கனவு விழிப்புணர்வு நிகழ்ச்சி

## கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் தலைமையில் நடைபெற்றது



**நாகப்பட்டினம்,ஏப்.23-**

நாகப்பட்டினம் மாவட்ட கலெக்டர் அலுவலக முதன்மை கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் "என் கல்லூரி கனவு" விழிப்புணர்வு நிகழ்ச்சி கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் தெரிவித்ததாவது,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம்; "என் கல்லூரி கனவு" என்ற தலைப்பில் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியானது, சுமார் 300க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்கள் 12ஆம் வகுப்பிற்கு பிறகு உயர்கல்விக்கு சரியான வழியை ஏற்படுத்தித்தருவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இத்துறையின் மூலம் சிறந்த கல்வியாளர்களைக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக வருகை தந்துள்ளனர்.

மேல்நிலைப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு படித்து தேர்ச்சி பெற்ற மாணவ-மாணவிகள் தங்களின் எதிர்கால கனவினை நனவாக்கும் வகையில் அவர்களின் உயர்கல்விக்கான வாய்ப்புகள் பற்றிய பிரிவு வாரியான பட்டப்படிப்புகள், பட்டயப்படிப்புகள் என்னென்ன உள்ளன என்பதையும், கல்லூரிகளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதையும், மேற்படிப்பினை முடித்தவுடன் கிடைக்கும் வேலைவாய்ப்புகள், போட்டித் தேர்வுகள் மற்றும் தொழில் வழிகாட்டல், ஊக்கப்படுத்துதல், வங்கிக்கடன் மற்றும் உதவித்தொகை பெறுதல் போன்ற விவரங்கள் புகழ் பெற்ற வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களைக் கொண்டு வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றது.

இத்தகைய நிகழ்ச்சிகள் மாணவர்களின் எதிர்கால குறிக்கோளை திட்டமிட்டு அடையவும், வெற்றி பெறவும் வழிவகை செய்யும். மேலும், தோல்விகளை வெற்றிகளின் தொடக்கமாக மாணவர்கள் எடுத்துக்கொண்டு முன்னேற வேண்டும். இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தேர்ச்சி பெற்ற அனைத்து மாணாக்கர்களும் சிறந்த வாய்ப்புகளுக்கு எந்த கல்லூரியில் என்ன படிக்கலாம் வருங்காலத்தை வளப்படுத்த எந்த பாடப்பிரிவை தேர்ந்தெடுக்கலாம் உதவித்தொகை வாய்ப்புகள் என்ன போன்ற தகவல்களை தெரிந்துகொள்ள இவ்வாய்ப்பினை பயன்படுத்தி சரியான உயர்கல்வியைத் தேர்ந்தெடுத்து வாழ்வில் வெற்றிப்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



திருச்சி மலைக்கோட்டை தாயுமானசுவாமி கோவில் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது.தேரோட்டத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தார்.இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

# திரு ஆரூரான் சர்க்கரை ஆலையில் கரும்புக்கு நிலுவைத் தொகை பெறாத விவசாயிகள் விவரங்கள் சமர்ப்பிக்க வேண்டும்

## கலெக்டர் தீபக் ஜேக்கப் தகவல்

**தஞ்சாவூர்,ஏப்.23-**

தஞ்சாவூர் மாவட்டம் திருமண்டங்குடி திருஆரூரான் சர்க்கரை ஆலை நலிவடைந்த காரணத்தால் 2018-19 ஆம் ஆண்டு முதல் அரவை நடைபெறாமல் இருந்தது. இதனால் அந்த சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கரும்புத் தொகை நிலுவையில் இருந்தது. விவசாயிகள் சார்பில் கோரப்பட்ட நிலுவைத் தொகையில் தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் (NCLT)–யில் 2.5.2022 அன்றைய தீர்ப்பின் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையில் 57.36 சதவீதம் அனுமதிக்கப்பட்ட தொகையாக விவசாயிகளுக்கு வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 29.96 கோடி ரூபாய் நிலுவைத் தொகை கலைத்தல் அலுவலர் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் வங்கி கணக்கு எண் விவரங்கள் பெறப்படாத காரணத்தால் 2.28 கோடி ரூபாய் நிலுவைத் தொகை கலைத்தல் அலுவலர் வசம் உள்ளது.

இதுவரை KYC விவரங்கள் வழங்காத விவசாயிகள் https://www.tasugars.in/investorinfo.html என்கிற வலைதளத்தில் தமிழ் அல்லது ஆங்கில விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து உடன் விண்ணப்பித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில், திவால் மற்றும் திவால் சட்டம் 2016 (Insolvency and Bankruptcy Code 2016) சட்டத்தின் கீழ், குறிப்பிடப்பட்டுள்ள காலமதம் உள்ள செலுத்தப்படாத தொகை கையாளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

கலைத்தல் அலுவலர் அவர்களின் முகவரி, ராமகிருஷ்ணன் சதாசிவன், IP Reg No: IBBI/IPA-001/IP-P00108/2017-18/10215, கண்காணிப்புக் குழுவின் தலைவர், திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், பழைய எண்: 22, புதிய எண் 28, மேனாட் தெரு, புரசைவாக்கம், சென்னை – 600 007, கைபேசி எண் 94444 55982 மின்னஞ்சல் முகவரி: thiruaroransugarsltd@gmail.com/ sadasivanr@gmail.com என்ற முகவரிக்கு விவசாயிகளின் வங்கி விவரங்களை உடன் அனுப்பி வைத்திட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

எனவே (NCLT) தீர்ப்பின் படி 57.36 சதவீதம் அனுமதிக்கப்பட்ட தொகை பெறாத விவசாயிகள், இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு KYC விவரங்களை விரைவில் சமர்ப்பித்து உரிய தொகையினை பெற்றுக் கொள்ள வேண்டும் என தஞ்சாவூர் கலெக்டர் தீபக் ஜேக்கப், தெரிவித்துள்ளார்.

### திருவாரூர் மாவட்டம்

# ஆடு வளர்ப்போர் ஆட்டு கொல்லி நோயிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகள்:

## கலெக்டர் சாரு ஸ்ரீ தகவல்

திருவாரூர்,ஏப்.23

வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளை தாக்கும் முக்கிய நோய்களில் ஆட்டுக் கொல்லி நோய் ஒன்றாகும். இந்நோய் மிக கொடிய வைரஸ் கிருமிகளால் பரவுகிறது. மழைக்காலத்திலும், பனிக்காலத்திலும் இக்கிருமியானது நோய் பாதித்த ஆடுகளின் சிறுநீர், கண்ணீர், கழிச்சல் மற்றும் சாணம் ஆகியவற்றின் மூலம் மிக விரைவில் பரவக்கூடியது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளின் வாயிலும், நாக்கிலும், ஈறுகளிலும் புண்கள் ஏற்படும். நோயினால் அவதிப்படும் ஆடுகளின் கண்கள், மூக்கு மற்றும் வாயிலிருந்து நீர் வடியும். தும்மல் மற்றும் இருமல் பிறகு ஆரம்பிக்கும். அவைகள் தீனி உட்கொள்ள முடியாமல் மிகவும் பாதிக்கப்படும். மிகவும் மெலிந்துவிடும். வெயில் காலத்தில், நோயினால் பாதிக்கப்பட்ட வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளுக்கு மூச்சிரைக்கும். காய்ச்சல் வரும். இறுதியில் கழிச்சல் கண்டு ஆடுகள் இறந்து போகும். நோய் தாக்கிய ஆடுகளில் நோயின் அறிகுறிகள் ஆறு நாட்களுக்கு இருக்கும். குட்டிகளில் அதிக இறப்பு ஏற்படும். இதனால் வெள்ளாடுகள் ஃ செம்மறி ஆடுகள் வளர்ப்போர்க்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பு ஏற்படும்.

எனவே, இந்நோய் தாக்கா வண்ணம் இருப்பதற்கு, வெள்ளாடுகள் ஃ செம்மறி ஆடுகளுக்கு வருடத்திற்கு ஒரு முறை தடுப்பூசிப் பணி மேற்கொள்வது ஒன்றே சிறந்த நிவாரணம். இம்மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையினரால், கால்நடை நலம் மற்றும் நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் ஆட்டுக் கொல்லி நோய் ஒழிப்புத் திட்டத்தின் தடுப்பூசிப்பணிகள், 29.04.2024 முதல் தொடங்கி 30 நாட்களுக்கு, மாவட்டத்தில் உள்ள 2,70,000 வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளுக்கு ஆட்டுக் கொல்லி நோய் தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது. ஆதலால், ஆடுகள் வளர்ப்போர் தங்கள் கிராமத்திற்கு தடுப்பூசி குழுவினர் வரும்பொழுது, 4 மாதத்திற்கு குறைவான வயதுள்ள ஆட்டுக் குட்டிகள் மற்றும் சினையுற்ற ஆடுகள் நீங்கலாக மற்ற அனைத்து வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளுக்கும் தவறாமல் ஆட்டுக் கொல்லி நோய் தடுப்பூசி போடப்படுவதுடன் தேசிய மின்னணு கால்நடை இயக்க தரவுகளின்படி தடுப்பூசி போடப்படும் அனைத்து ஆடுகளுக்கும் பார் கோடுடன் கூடிய காதுவில்லைகள் அணிவித்து பாரத் பசுதான் செயலியில் தடுப்பூசி போடப்பட்ட ஆடுகள் விவரங்கள், உரிமையாளர்கள் விவரங்கள் பதிவு செய்யப்படும்

இதற்காக இப்பகுதிக்காக பிரத்யேகமாக வழங்கப்பட்ட வெளிறிய ஊதாநிற காதுவில்லைகள் ஆட்டினங்களுக்கு அணிவிக்கப்படும். எனவே மேற்காணும் தடுப்பூசி பணிக்கு ஒத்துழைப்பு நல்கவும் தடுப்பூசிப்பணியினை பயன் படுத்திக் கொண்டு அனைத்து கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் தங்கள் ஆடுகளை இக்கொடிய நோய் வராமல் பாதுகாக்கும்படியும் கலெக்டர் தி.சாருஸ்ரீ, கேட்டுக்கொண்டுள்ளார்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# திருமருகலில் வணிகர்கள் கூட்டமைப்பு பொதுக்குழு கூட்டம்



**நாகப்பட்டினம்,ஏப்.23-**

நாகை மாவட்டம் திருமருகல் தனியார் மண்டபத்தில் திருமருகல் வணிகர்கள் கூட்டமைப்பு பொதுக்குழு கூட்டம் ஞாயிற்று கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு வணிகர்கள் கூட்டமைப்பு தலைவர் ஜெயபாலசங்கர் தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் குமரகுருபரன்,சதீஷ் குமார்,குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைத் தலைவர் காசிஅறிவழகன் வரவேற்றார்.இதில் தமிழ்நாடு அரசு வணிகர் நல வாரிய உறுப்பினர் செந்தில்நாதன்,மாநில துணைத்தலைவர் தென்னரசு,மாவட்ட தலைவர் வேதநாயகம், செயலாளர் பிலிப்ராஜ், பொருளாளர் சுபாஷ்சந்திரன், செய்தி தொடர்பாளர் ரஜினிகாந்த் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். கூட்டத்தில் வர்த்தக சங்கத்திற்கு நலவாரியம் அமைத்து காப்பீடு செய்ய வேண்டும்,வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திருமருகல் கடைத்தெருவில் கழிப்பறை வசதி ஏற்படுத்த வேண்டும்,

வர்த்தகர்கள் 100 சதவிகிதம் புகையிலை மற்றும் போதை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் பொருளாளர் ஹரிஹரன்,செய்தி தொடர்பாளர் ரஞ்சித்சிங் உட்பட நிர்வாகிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.முடிவில் துணைச் செயலாளர் முருகானந்தம் நன்றி கூறினார்.

# உடல் உறுப்புகளை தானம் செய்த விசுவக்குடியைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவரது உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம்

## சார் கலெக்டர் நேரில் மரியாதை செலுத்தினார்



**பெரம்பலூர்,ஏப்.23-**

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டம் விசுவகுடி கிராமம் வடக்கு காலனியைச் சேர்ந்த ஸ்ரீரங்கன் மகன் கிருஷ்ணன் (தூய்மை பணியாளர், வயது 58 ) என்பவர், கடந்த 19-4-2024 அன்று மாலை சுமார் 6 மணி அளவில் கீழே விழுந்துவிட்டார். இவரை உடனடியாக மீட்டு பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்பு மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மருத்துவர்கள் இவரை பரிசோதனை செய்ததில் இவர் மூளை சாவு அடைந்துவிட்டார் என தெரிவித்துள்ளனர். அதனைத்தொடர்ந்து அவரது மனைவி தனலட்சுமி (வயது 52) என்பவர் கணவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய சம்மதித்துள்ளார்.

இவருக்கு 4 மகன்கள் மற்றும் 3 மகள்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது. உடல் உறுப்புகளை தானம் செய்யும் நபர்களை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்திட வேண்டும் என்ற அரசின் உத்தரவின்படி, (22.04.2024) விசுவகுடியில் கிருஷ்ணன் அவர்களின் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டு உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சார் கலெக்டர் சு.கோகுல் கலந்து கொண்டு கிருஷ்ணனின் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தினார்.

# அமேசான் மினி பிரபலமான 200+ டப் செய்யப்பட்ட ஷோஸ் மற்றும் மூவீஸ்களை வெளியிடுவதன் மூலம் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் காலடி எடுத்து வைக்கிறது

**கோவை, ஏப்.23-**

பல்வேறு வகையான, சிறப்பு மிக்க உள்ளடக்கத்தை கொண்ட அசல் மற்றும் டப் செய்யப்பட்ட ஷோஸ் மற்றும் மூவீஸ்களை வழங்குவதில் புகழ்பெற்ற நிறுவனமான அமேசானின் இலவச வீடியோ ஸ்ட்ரீமிங் சேவையான அமேசான் மினி டிவி-, அடுத்து வெளியிடவிருக்கும் அதன் புத்தம் புதிய அறிவிப்பின் மூலம் ஒரு மிகப் பரந்த அளவிலான பார்வையாளர்களுக்கு மிகுந்த உற்சாகமளிக்கும் தகவலை வெளியிட முனைப்புடன் தயாராகி வருகிறது. இந்த ஸ்ட்ரீமிங் சேவையானது அதன் வீச்சளவு வரம்பை விரிவுபடுத்தி, தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் டப் செய்யப்பட்ட 200 க்கும் மேற்பட்ட ஷோஸ் மற்றும் மூவீஸ்களின் விரிவான தொகுப்பை வெளியிடுகிறது. டப் செய்யப்பட்ட மனதைக் கொள்ளைகொள்ளும் இந்த அற்புதமான திரைப்பட ஷோஸ் அண்ட் மூவீஸ்களின் வரிசையில், மற்றவற்றுக்கிடையில் ஹண்டர்-டுடேகா நஹி தோடேகா, பிசிக்ஸ் வாலா, அதிரடி காட்சிகள் நிறைந்த தேசபக்தித் தொடர் ரக்ஷக்- இந்தியாஸ் பிரேவ்ஸ், இளம் காதல் தொடர் ஹைவே லவ் போன்ற உன்னதமான ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்ற மினிடிவியின் ஹிந்தி அசல் திரைப்படங்களும் அடங்கும். இது தவிர, ட்விலைட், நவ் யூ சீ மீ, ஹங்கர் கேம்ஸ் தொடர்கள், ஸ்டெப் அப் ஃபிரான்சைஸ், ரெட் போன்ற இன்னும் பல காலத்தால் அழியாத கலைப் படைப்புக்கள் உட்பட, தமிழ் மற்றும் தெலுங்கில் டப் செய்யப்பட்ட ஹாலிவுட் பிளாக்பஸ்டர் திரைப்படங்களின் தொகுப்பையும் பார்வையாளர்கள் கண்டு அனுபவித்து மகிழலாம். மேலும் முழுமையான சிறந்த உள்ளடக்கங்களைக் கொண்ட திரைப்படங்களை அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் பொருட்டு, தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் டப் செய்யப்பட்ட கொரியன், துருக்கிய மற்றும் மாண்டரின் மொழி ஷோஸ் மற்றும் மூவீஸ்களை இந்த சேவையானது வழங்கும்.அமேசான் மினி டிவி ஹெட் ஆஃப் கான்டெண்ட் அமோக் துசாத் கூறுகையில் , "எங்கள் பார்வையாளர்களுக்கு தனிப் பயனாக்கப்பட்ட மற்றும் மனதை ஆழ்ந்து போகச்செய்யும் காட்சி அனுபவத்தை வழங்குவதே அமேசான் மினி டிவியில் எங்களின் குறிக்கோளாக உள்ளது. எங்கள் பார்வையாளர்களின் பல்வேறு வகையான விருப்பங்களைப் பூர்த்தி செய்வதையும் மற்றும், அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்தமான ஷோஸ் மற்றும் மூவீஸ்களை தங்களுக்கு விருப்பமான மொழியிலேயே கண்டு ரசிப்பதை உறுதி செய்வதையும் எங்கள் குறியிலக்காக கொண்டுள்ளோம் பல்வேறு வகைப்பிரிவைச் சேர்ந்த உள்ளடக்கங்களைக் கொண்ட அசல் மற்றும் டப்பிங் செய்யப்பட்ட எங்கள் ஒரு பரந்த விரிவான வழங்கல்களுடன் பார்வையாளர்கள் ஆழ்ந்த ஈடுபாட்டை கொண்டிருப்பார்கள் என்பதில் நாங்கள் நிச்சயமாக உள்ளோம்." என்று கூறினார்.

வாகனங்கள் ஓட்டும்
போது செல்போன்
பேசாதே...
பேசுவது எமனாக
இருக்கலாம்



மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு நிறைவடைந்ததையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம்தென்னரசு, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ, தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன், சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன், தென்காசி மக்களவை தொகுதி வேட்பாளர் டாக்டர் ராணி ஸ்ரீகுமார், ஆகியோர் சந்தித்துப் பேசினர்.



**திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் குடிமை பணி யுபிஎஸ்சி தேர்வில் மாநில அளவில் முதலிடம் பிடித்த திருவள்ளூர் மாவட்டம் ஆவடியை சேர்ந்த புவனேஷ்ராம் மாவட்ட நிர்வாகம் சார்பாக அழைத்து வரப்பட்டு கலெக்டர் பிரபுசங்கர் புவனேஷ்ராமிற்கு கொடுத்து கேடயம் வழங்கி கவுரவித்தார்.**

# ஈரோடு வில்லரசம்பட்டி பனங்காடு சக்தி விநாயகர் சக்தி மாரியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா



**ஈரோடு ஏப்.23-**

ஈரோடு வில்லரசம்பட்டி பனங்காடு ஸ்ரீ சக்தி விநாயகர் ஸ்ரீ சக்தி மாரியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா நேற்று நடைபெற்றது முன்னதாக கோயிலின் கும்பாபிஷேக விழா கடந்த ஞாயிறு அன்று கணபதி ஹோமம் நவக்கிரக ஹோமம் துர்கா லட்சுமி சரஸ்வதி ஹோமத்துடன் தொடங்கியது அன்று மதியம் காவிரி ஆற்றுக்கு சென்று புனித நீர் எடுத்துவரப்பட்டது தொடர்ந்து ஊர் எல்லையில் இருந்து தீர்த்தம் மற்றும் முளைப்பாளியை மேள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டது நேற்று காலை ஸ்ரீ சக்தி விநாயகர் ஸ்ரீ சக்தி மாரியம்மன் மற்றும் பரிவார தெய்வங்கள் அமைந்துள்ள கோயில் கும்பக்களுக்கு புனித ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது தொடர்ந்து பொதுமக்கள் மீதுபுனித நீர் தெளிக்கப்பட்டது விழாவை தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் கோயில் பிரசாதங்கள்வழங்கப்பட்டது விழா ஏற்பாடுகளை வில்லரசம்பட்டி பனங்காடு ஊர் பொதுமக்கள் மற்றும் திருப்பணி குழுவினர் செய்தனர்



**திருவொற்றியூர் பெரியார் நகரில் கராத்தே பள்ளி நடத்தும் சி.வி.நிஷோக் மகள் மோக்ஷிதா அண்ணன் சி.வி. ஹேமந்த் மகள் கணிஷாஆகிய இருவரும் கராத்தே தற்காப்பு கலையை கற்றுக் கொண்டு சிறப்பாக விளையாடி வருகிறார்கள். அவர்களை காவல்துறை தலைமை இயக்குனர் சங்கர் ஜிவால் பாராட்டினார்.**

# சித்ரா பவுர்ணமியையொட்டி திருவண்ணாமலைக்கு மாதவரத்தில் இருந்து 30 சிறப்பு பஸ்கள் இயக்கம்

**சென்னை ஏப் 23-**

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக சென்னையில் இருந்து திருவண்ணாமலைக்கு கூடுதலாக பஸ்கள் இயக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதையடுத்து சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து நேற்று 527 பஸ்களும், இன்று (23-ந்தேதி) 628 பஸ்களும் இயக்கப்படுகின்றன.

இந்த நிலையில் சித்ரா பவுர்ணமியையொட்டி சென்னை மாதவரத்தில் இருந்தும் திருவண்ணாமலைக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. மாதவரத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு நேற்று முதல், இன்று வரை கூடுதலாக தலா 30 பஸ்கள் இயக்கப்படும் என போக்குவரத்து கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் www.tnstc.in மற்றும் செயலி மூலம் முன் பதிவு செய்து கொள்ளலாம் என்று போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறியுள்ளனர்.



**ஈரோடு பச்சைப்பள்ளியில் உள்ள பாரதிய ஜனதா கட்சி அலுவலக வளாகத்தினுள் விநாயகர் கோயில் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் விழா நேற்று நடைபெற்றது. கலசத்திற்கு ஆச்சாரியார்கள் புனித நீர் ஊற்றினர். விழாவில் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சரஸ்வதி உட்பட பலர் பங்கேற்றனர்**

# வடசென்னையில் 2 மணி நேரம் சிலம்பம் சுற்றி மாணவர்கள் சாதனை



**திருவொற்றியூர்ஏப்.23**

வடசென்னையில் செயல்பட்டு வரும் யுத்த வர்ம சிலம்பபோர்கலை அகாடமி சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழகத்தின் 17 மாவட்டங்களை சேர்ந்த 750 சிலம்ப வீரர்கள் சென்னை புது வண்ணாரப்பேட்டையில் அமைந்துள்ள பாபு ஜெகஜீவன் ராம் ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ் மைதானத்தில் தமிழ்நாடு வரைபடம் போல் இரண்டு மணி நேரம் தொடர்ச்சியாக சிலம்பம் சுற்றி யூனிவர்சல் அச்சிவர்ஸ் ஆப் ரெகார்ட் மற்றும் பியூச்சர் கலாம் புக் ஆப் ரெக்கார்டில் இடம் பெற்றனர்.

நமது பாரம்பரிய விளையாட்டான சிலம்பகலையை ஊக்குவிக்கவும் சிலம்பக் கலை உலக அளவில் பெரும் வளர்ச்சி பெரும் விதமாக இந் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சியில் காமராஜர் துறைமுக மேனேஜிங் டைரக்டர் அயிரின்சிந்தியா ஐ.ஏ.எஸ் சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக வர்த்தக அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன் லயன் எல்.கண்ணன் கே.கணேசன்சமூக சேவகிஹேமலதா சிலம்ப ஆசான்கள்எம்.சௌந்தரராஜன்யு.விஜயன்அகத்தியா சேலஞ்சர்ஜிம் ரா.பரசுராமன் ஆ.ஞானம் அம்மையப்பர் சேவை மையம்ஏ சி எல்.எஸ். சீனிவாசன்டாக்டர் ஜி.ராஜகுமார் அன்பாலயா சிவக்குமார் வீரத்தமிழன் சிலம்பக்கூடம் ஆசான் சரவணன்துரைசாமிதீபிகா உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கினார்கள்.

சாதனை படைத்ததற்கான சான்றிதழ்களை ப்யூச்சர் கலாம் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் நிறுவனர் டாக்டர் பாபு பால கிருஷ்ணன் மற்றும் அந்தோணி இயேசு இணைந்து யுத்த வர்ம சிலம்ப போர்க் கலை அகாடமி விளையாட்டு சங்கத்தின் நிறுவனர் ஆசான் எம்.சண்முகத்திடம் வழங்கினார்கள். முன்னதாக மாலை 3:40 மணிக்கு தொடங்கி 5.40 மணி வரை தொடர்ச்சியாக இரண்டு மணி நேரம் 750 மாணவர்கள் தமிழ்நாடு வரைபடம் வடிவில் சிலம்பம் சுற்றி சாதனைபடைத்தார்கள்.

## ஈரோடு மாவட்டத்தில்

# வரும் 26ம் தேதி டாஸ்மாக் கடையை மூட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா உத்தரவு

**ஈரோடு.ஏப்.23-**

இந்திய பாராளுமன்ற தேர்தல் - 2024-ஐ முன்னிட்டு கர்நாடக மாநில பாராளுமன்ற தேர்தல்-2024 எதிர்வரும் 26.04.2024 அன்று நடைபெறுவதையொட்டி 24.04.2024, 25.04.2024 மற்றும் 26.04.2024 ஆகிய தினங்களில் ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டத்தில் கதவு எண். 51114, ராமபுரம் என்ற முகவரியில் செயல்பட்டுவரும் அரசு மதுபான சில்லறை விற்பனைக் கடை எண். 3948 மற்றும் அதனுடன் இயங்கும் பார் ஆகியவை மூடப்பட்டிருக்கும் என்றும், அன்றைய தினங்களில்; மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது என்றும், அன்றைய தினம் மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஈரோடு கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.

# கேரளாவில் தேர்தல் பணிக்காக ஈரோட்டில் இருந்து 100 போலீசார் பயணம்

**ஈரோடு, ஏப்.23**

இந்தியாவில் பாராளுமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. முதற்கட்ட தேர்தல் நடந்து முடிந்து விட்டது. இதனை அடுத்து அடுத்தடுத்த கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. அதன்படி கேரள மாநிலத்தில் வரும் 26 ஆம் தேதி பாராளுமன்ற தேர்தலுக்கான ஓட்டு பதிவு நடக்கிறது. இதற்கான பாதுகாப்பு பணிக்காக பல்வேறு மாநிலங்களில் இருந்து போலீசார் கேரளா செல்லத் தொடங்கியுள்ளனர். அதன்படி ஈரோடு மாவட்டத்திலிருந்து 100 போலீசார் தேர்தல் பாதுகாப்பு பணிக்காக கேரளா மாநிலம் ஆலப்புழா, கோட்டயத்துக்கு நேற்று கிளம்பி செல்கின்றனர். 26 ஆம் தேதி தேர்தல் முடிந்தவுடன் மீண்டும் ஈரோட்டுக்கு அவர்கள் வருவார்கள். தேர்தல் பாதுகாப்பு பணிக்கு செல்லும் போலீசார் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டனர்.

# தேர்தல் நடத்தை விதிகளை தளர்த்துமாறு த.மா.கா.கோரிக்கை

**ஈரோடு ஏப் 23**



தமிழ் மாநில காங்கிரஸ் இளைஞர் அணி தலைவர் எம் யுவராஜா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது

மக்களவைத் தேர்தல் ஏப்ரல் 19ஆம் தேதி முழுமையாக முடிவடைந்த மாநிலங்களிலும், விரைவில் தேர்தல் முடியும் மாநிலங்களிலும் தேர்தல் நடத்தை விதிகளை (எம்சிசி) தளர்த்த வேண்டும். 21 மாநிலங்களில் உள்ள 102 மக்களவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற முதல்கட்டத் தேர்தலில் தமிழகம், புதுச்சேரி மற்றும் சிறிய மாநிலங்களில் தேர்தல் முழுமையாக நிறைவடைந்துள்ளது. முதல் கட்டத்துக்குப் பிறகு, ஏப்ரல் 26, மே 7, மே 13, மே 20, மே 25 மற்றும் ஜூன் 1 ஆகிய தேதிகளில் அடுத்த கட்ட வாக்குப் பதிவு நடைபெறும். 543 மக்களவைத் தொகுதிகளுக்கான மக்களவைத் தேர்தல் முடிவுகள் ஜூன் 4ஆம் தேதி வெளியாகிறது. தேர்தல் ஆணையத்தின் விதிகளின்படி, முழு முடிவும் வெளியாகும் வரை எம்.சி.சி. இருக்கும். எனவே, எம்சிசியை ரத்து செய்ய இன்னும் 3 முதல் 5 நாட்கள் ஆகும். அதுவரை ஒட்டு மொத்த நிர்வாகமும் முடங்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட எம்எல்ஏக்கள், உள்ளாட்சித் தலைவர்கள், பல்வேறு அரசு, மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகிகள் எந்த முடிவும் எடுக்கவோ, பொதுமக்கள் குறைகளைக் கேட்கவோ முடியவில்லை. வாராந்திர மக்கள் குறைதீர்ப்பு, மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், அரசு விழாக்கள், புதிய பணிகளுக்கான பூமி பூஜை, நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகள் தொடக்க விழா, புதிய அறிவிப்புகள் மற்றும் புதிய திட்டங்கள், பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் விநியோகம், பொதுமக்கள் மனுக்கள் பரிசீலனை, டெண்டர் அழைப்பு போன்றவை நடக்கவில்லை.

தேர்தல் நிலுவையில் உள்ள மாநிலங்களில் MCC விதிகளை அமல்படுத்துவது நியாயமானது.

ஆனால் தேர்தல் முடிந்த மாநிலங்களில் எம்சிசியை அமல்படுத்துவது நியாயமானதல்ல. எம்.சி.சி தளர்வு மற்றும் தேர்தல் முடிந்த மாநிலங்களில் இயல்பான நிர்வாகம் ஆகியவை தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் தேர்தல் செயல்முறையை பாதிக்காது, ஏனெனில் இங்கு திமுக ஆட்சிவெளியிடும் அறிவிப்பு அண்டை மாநிலங்களின் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

மாநிலத்தில் 45 நாட்கள் நிர்வாகம் தேக்கம் அடைந்திருப்பது மக்களை, குறிப்பாக அரசாங்க உதவியை நாடும் ஏழை மற்றும் ஏழை மக்களைத் பாதிக்கும், மேலும் தேர்தல் ஆணையத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்தும். ஏற்கனவே, ஏப்ரல் 19ம் தேதி இரவு 7 மணிக்கும் நள்ளிரவுக்கும் அறிவிக்கப்பட்ட இறுதி வாக்குப்பதிவு சதவீதத்தில் தேர்தல் ஆணையம் செய்த குழப்பம் மற்றும் முறையான ஆவணங்கள் இல்லை என்ற பெயரில் அப்பாவி பொதுமக்களிடம் இருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை பறிமுதல் செய்தது, பணம் ரூ50000 உச்சவரம்பு நிர்ணயம் செய்வது குறித்து இங்குள்ள மக்கள் வேதனையடைந்துள்ளனர். எனவே, மருத்துவமனை, கல்லூரி சேர்க்கை, திருமணம், சொத்துப் பதிவு, வர்த்தகம் மற்றும் தொழில்துறை போன்றவற்றுக்கு பணத்தை எடுத்துச் செல்வதில் தேர்தல் விதிமுறைகள் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்துள்ளன. எனவே த.மா.கா இளைஞர் அணி சார்பாக தேர்தல் ஆணையத்திடம் தேர்தல் நடத்தை விதிகளை தளர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில் சித்திரை திருவிழா கொடியேற்றம்

**சென்னை ஏப் 23-**

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில், 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக விளங்குகிறது. இங்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நின்ற திருக் கோலத்தில் வேங்கட கிருஷ்ணன் என்ற திருநாமத்துடன் காட்சி தருகிறார். மேலும் தனது தேவியார் ருக்மணி பிராட்டி, மகன் பிருத்யும்னன், பேரன் அனிருத்தன், தம்பி சாத்யகி என குடும்ப சகிதமாக இக்கோவிலில் அருள் பாலிக்கிறார். குருஷேத்திரப் போரில் தன் முகத்தில் ஏற்பட்ட காயங்களும் உற்சவர் பார்த்த சாரதிபெருமாளுக்கு காணப்படுகிறது.

இக்கோவிலில் ஆண்டுதோறும் பார்த்தசாரதி பெருமாள் பிரம்மோற்சவம் சித்திரை மாதமும், இங்கு மேற்கு நோக்கி எழுந்தருளி இருக்கும் நரசிம்ம பெருமாள் பிரம்மோற்சவம் ஆனிமாதமும் விமரிசையாக நடைபெறுகிறது.

அதன்படி பார்த்த சாரதி பெருமாளுக்கான சித்திரை மாத பிரம்மோற்சவ விழா இன்று காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. முதல் நாளில் புன்னைமர வாகன வீதி உலாவும், 2-ம் நாள் விழாவில் பரமபத நாதன் திருக் கோலத்தில் சேஷ வாகன வீதி உலா மற்றும் சிம்ம வாகன வீதி உலாவும் 3-ம் நாளில் கருட சேவையும் நடைபெறுகிறது.

4-ம் நாளில் சூரிய பிரபை, சந்திர பிரபை, 5-ம் நாள் நாச்சியார் திருக் கோலத்தில் பல்லக்கு சேவை நடைபெறுகிறது. 6-ம் நாள் அதிகாலை 5.30 மணிக்கு சூர்ணா பிஷேகம் நடைபெற இரவு 8 மணிக்கு யானை வாகனத்தில் பெருமாள் வீதி உலா நடைபெறுகிறது.

விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் 7-ம் நாளான ஏப்ரல் 29-ம் தேதி நடைபெறுகிறது. அன்று அதிகாலை 3.30 மணிக்கு பெருமாள் திருத்தேரில் எழுந்த ருள்கிறார். காலை 7 மணி அளவில் தேரோட்டம் நடைபெறுகிறது. 8-ம் நாள்திருவிழாவான 30-ந் தேதி செவ்வாய்கிழமை வெண்ணெய்த் தாழி கண்ணன் கோலத்தில் பல்லக்கு சேவை. 9-ம் நாள் திருவிழாவில் காலை 6.15 மணிக்கு தீர்த்தவாரி உற்சவம், அன்று இரவு 7.45 மணிக்கு கண்ணாடி பல்லக்கு சேவை நடக்கிறது.10-ம் நாளான மே-2ந்தேதி கொடி இறக்கத்துடன் பிரம்மோற் சவ விழா நிறைவடைகிறது.

# சமூக வலைத்தளங்களில் போட்டோக்களை பகிர்வதை தவிர்க்க வேண்டும்: சைபர் கிரைம் போலீசார் எச்சரிக்கை

**ஈரோடு, ஏப். 23-**

சைபர் கிரைம் போலீசார் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஆன்லைன் வர்த்தகம், வேலை வாய்ப்பு, லோன் தருவது, கிரெடிட் கார்டு லிமிட் அதிகரித்து தருவது, தவறான பார்சல் அனுப்பி இருப்பது, பான் - ஆதார் கார்டை வங்கி கணக்கில் சேர்ப்பது, வங்கி ஏடிஎம் கார்டை புதுப்பித்தல், போலியான கஸ்டமர் கேர் நம்பருக்கு போன் செய்வது, மலிவு விலையில் பொருட்கள், ஆன்லைனில் விற்பனை போன்ற எந்த வகையான சைபர் கிரைம் குற்றங்களிலும் பணத்தை இழக்க வேண்டாம். சமூக வலைத்தளங்களில் கிவ் - அப் போன்று வரும் லிங்கை கிளிக் செய்து யூசர் ஐடி மற்றும் ஓடிபி எண் பகிர்வது, சமூக வலைத்தளங்களில் தன் போட்டோவை அனைவரும் பார்க்கும்படி பொதுவாக பகிர்வதை தவிர்க்க வேண்டும். ஆன்லைன் மோசடியில் பணம் இழப்பு ஏற்பட்டவுடன் அல்லது 24 மணி நேரத்திற்குள் சைபர் கிரைம் உதவி எண் 1930-க்கு புகார் அளிக்க வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குமரன் நகர் பகுதியில் கத்தியைக் காட்டி மிரட்டி பணம் பறித்து சென்ற 3 பேர் கைது

**சென்னை ஏப் 23-**

சென்னை, இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுக்கா பகுதியைச் சேர்ந்த பிரதீப், என்பவர் சென்னை, மேற்கு மாம்பலம் பகுதியில் உள்ள டாஸ்மாக் பாரில் வேலை செய்து கொண்டு அங்கேயே தங்கி வருகிறார். பிரதீப் நேற்று முன் தினம் , மேற்கு மாம்பலம், ரெட்டிகுப்பம் ரோடு, சீனிவாசா தியேட்டர் அருகே நின்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த சுமார் 7 நபர்கள் பிரதீப்பை வழிமறித்து, கத்தியை காட்டி மிரட்டி பணம் கேட்டுள்ளனர். பிரதீப் பணம் தர மறுக்கவே, அந்த நபர்கள் பிரதீப்பை கையால் தாக்கி அவர் வைத்திருந்த பணம் ரூ.2,000/-ஐ பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர். இது குறித்து பிரதீப், குமரன்நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

குமரன்நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட ஶ்ரீஹரி, என்பவரை கைது செய்தனர். மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய 2 இளஞ்சிறார்கள் பிடிபட்டனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட ஶ்ரீஹரி மீது 3 கொலை முயற்சி வழக்குகள் உட்பட 5 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட ஶ்ரீஹரி மற்றும் 2 இளஞ்சிறார்கள் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 4 நபர்களை காவல்குழுவினர் தேடி வருகின்றனர்.

# ஊரக உள்ளாட்சி தேர்தல் முன்னேற்பாடு பணிகள் : மாநில தேர்தல் ஆணையர் ஆலோசனை

தூத்துக்குடி.ஏப்.23.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாநில தேர்தல் ஆணையர் ஜோதி நிர்மலாசாமி ஆலோசனை நடத்தினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் காலியாக உள்ள ஊரக உள்ளாட்சி பதவியிடங்களுக்கு தேர்தல் நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் ஜோதி நிர்மலாசாமி, தலைமையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் கோ.லட்சுமிபதி முன்னிலையில் தடைபெற்றது. இக் கூட்டத்தில் ஊராட்சிகள் உதவி இயக்குநர், மகளிர் திட்ட இயக்குநர், நேர்முக உதவியாளர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மழைநீர் உயிர்நீர்



**தென்காசி தொகுதியில் பிரச்சாரம் செய்த திமுக மாநில மகளிர்அணி அமைப்பாளர்கனிமொழியை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் நேரில் சந்தித்து பொன்னாடை வழங்கி நன்றி தெரிவித்தார்.**

### கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் வெற்றி:

# உலக சாம்பியன்ஷிப் தொடருக்கு முன்னேறிய தமிழக வீரர் குகேஷ்



**ஒட்டோவா, ஏப். 23-**

கேண்டிடேட்ஸ் செஸ் தொடரின் 14-வது சுற்றில் இந்திய கிராண்ட்மாஸ்டரான டி.குகேஷ் அபார வெற்றி பெற்றுள்ளார். மொத்தம் 9 புள்ளிகள் பெற்றுள்ள அவர் உலக சாம்பியன்ஷிப் தொடருக்கு முன்னேறி சாதனை படைத்துள்ளார்.

**மிக இளம் வயதில்...**

கனடாவில் உள்ள டொரண்டோ நகரில் இந்த கேண்டிடேட்ஸ் செஸ் தொடர் நடைபெற்றது. 14 சுற்றுகள் கொண்ட இந்த செஸ் தொடரில் மிக இளம் வயதில் வெற்றி பெற்றவர் என்ற சாதனையை டி.குகேஷ் படைத்துள்ளார். இந்த வெற்றியின் மூலம் உலக சாம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்கும் இரண்டாவது இந்தியர் என்ற சாதனையையும் குகேஷ் எட்டியுள்ளார்.

**அமெரிக்க வீரரை...**

14-வது சுற்று ஆட்டத்தில் டி.குகேஷ், அமெரிக்க கிராண்ட் மாஸ்டரான ஹிகாரு நகமுராவுடன் மோதினார். இதில் கருப்பு நிற காய்களுடன் விளையாடிய குகேஷ் ஆட்டத்தை டிரா செய்தார். இது குகேஷிற்கு சாதகமாக மாற, கேண்டிடேட்ஸ் சாம்பியன் பட்டம் வென்ற இளம் வயது வீரர் என்ற பெருமையை பெற்றார்.

**9 புள்ளிகளுடன்...**

14 சுற்றுகளின் முடிவில் குகேஷ் 9 புள்ளிகளையும், நகமுரா 8.5 புள்ளிகளையும் பெற்றனர். இதன் மூலம், உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் குகேஷ் சீனாவைச் சேர்ந்த டிங் லிரென எதிர்கொள்ள இருக்கிறார். அதோடு, உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டிக்கு தகுதி பெற்ற முதல் இளம் வீரர் என்ற பெருமையையும் குகேஷ் தனதாக்கியுள்ளார். அவருக்கு விஸ்வநாதன் ஆனந்த் தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

### பிரதமர்-முதல்வர் பாராட்டு

**கே**ண்டிடேட்ஸ் செஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற குகேஷுக்கு பல்வேறு தரப்பில் இருந்து வாழ்த்துக்கள் குவிந்து வருகிறது. இந்த நிலையில், குகேஷுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது; "குகேஷின் சாதனை, அவரது அசாதாரண திறமை மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. கோடிக்கணக்கானவர்களை ஊக்குவிக்கும் விதமாக உள்ளது. குகேஷின் வெற்றியால் இந்தியாவே பெருமை கொள்கிறது." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது., "17 வயதில் கேண்டிடேட்ஸ் தொடரை வென்று வரலாறு படைத்த குகேஷுக்கு வாழ்த்துகள். உலக செஸ் சாம்பியன் தொடரில் டிங் லிரனுக்கு எதிரான போட்டியில் வெல்ல வாழ்த்துகள்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### போப்பண்ணாவுக்கு பத்மஸ்ரீ விருது



குடியரசு தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்ற விழாவில் இந்திய டென்னிஸ் வீரர் போபண்ணாவுக்கு பத்மஸ்ரீ விருதை ஜனாதிபதி திரௌபதி முர்மு நேற்று வழங்கினார்.

# பெங்களூரு, பஞ்சாப் அணி கேப்டன்களுக்கு அபராதம்

## ஐ.பி.எல். நிர்வாகம் நடவடிக்கை

**மும்பை, ஏப். 23-**

பெங்களூரு அணி கேப்டன் டு பிளெஸ்சிஸ், பஞ்சாப் அணி கேப்டன் சாம் கர்ரனுக்கு அபராதம் விதித்துள்ளது ஐ.பி.எல். நிர்வாகம்.

**கொல்கத்தா வெற்றி...**

ஐ.பி.எல் தொடரில் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் நடைபெற்ற 36வது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் பெங்களூரு அணியை 1 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி கொல்கத்தா திரில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் தோல்வி அடைந்ததன் மூலம் பெங்களூரு அணியின் பிளே ஆப் சுற்று வாய்ப்பு கிட்டத்தட்ட முடிந்து விட்டது. இதையடுத்து இரவு முல்லன்பூரில் நடைபெற்ற 37வது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

**பிளே ஆப் சுற்றுக்கு...**

இந்த ஆட்டத்தில் 3 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தி குஜராத் டைட்டன்ஸ் அணி வெற்றி பெற்றது. இந்த தோல்வியின் மூலம் பஞ்சாப் அணியும் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறுவது கேள்விக்குறியாகி உள்ளது. இந்நிலையில் இந்த இரு ஆட்டங்களில் ஆடிய பெங்களூரு கேப்டன் டு பிளெஸ்சிஸ் மற்றும் பஞ்சாப் கேப்டன் சாம் கர்ரனுக்கு பி.சி.சி.ஐ அபராதம் விதித்துள்ளது. கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் 20 ஓவர்களை வீசி முடிக்க வில்லை.

**50 சதவீதம் அபராதம்...**

இதன் காரணமாக பெங்களூரு அணி கேப்டன் டு பிளெஸ்சிஸ்-க்கு ரூ.12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மறுபுறம் குஜராத்துக்கு எதிரான ஆட்டத்தில் பஞ்சாப் கேப்டன் சாம் கர்ரனுக்கு ஐ.பி.எல் நடத்தை விதிகளின் பிரிவு 2.8 இன் கீழ் லெவல் 1 குற்றத்திற்காக போட்டிக் கட்டணத்தில் 50 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. நடுவரின் முடிவில் கருத்து வேறுபாடு காட்டியதை அடுத்து அவருக்கு போட்டிக் கட்டணத்தில் 50 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த குற்றத்தை சாம் கர்ரன் ஒப்புக்கொண்டதாகவும், அபராதம் விதித்ததை ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஞ்சாப்பை வீழ்த்தியது குஜராத்

**சண்டிகர், ஏப். 23-**

பஞ்சாப் கிங்ஸ் அணியை 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் டைட்டன்ஸ் அணி வெற்றி பெற்றது. கில், சாய் சுதர்ஷன் மற்றும் ராகுல் தெவாட்டியா போன்ற பேட்ஸ்மேன்கள் குஜராத் அணியின் வெற்றிக்கு உதவினர்.

**37 லீக் போட்டி...**

ஐபிஎல் சீசன் 17 விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் சண்டிகர் மகாராஜா யாதவிந்திரா சிங் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் 37 லீக் போட்டியில் பஞ்சாப் மற்றும் குஜராத் அணிகள் விளையாடின. டாஸ் வென்ற பஞ்சாப் கிங்ஸ் அணியின் கேப்டன் சாம் கரன் முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தார். அந்த வகையில் பஞ்சாப் கிங்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சாம் கரன் மற்றும் பிரப்சிம்ரன் சிங் களம் இறங்கினார்கள். இருவரும் ஜோடி சேர்ந்து அருமையான தொடக்கத்தை அந்த அணிக்கு அமைத்து கொடுத்தனர். 52 ரன்கள் வரை இவர்கள் ஜோடி அமைத்தனர்.

**ஹர்ப்ரீத் ப்ரார்...**

இதனிடையே அதிரடியாக விளையாடி வந்த பிரப்சிம்ரன் சிங் விக்கெட்டை பறிகொடித்தார். பின்னர் ரிலீ ரோசோவ் களம் இறங்கினார். 7 பந்துகளில் 9 ரன்கள் மட்டுமே எடுத்து நூர் அகமது பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். பின்னர் வந்த ஜித்தேஷ் சர்மா, லியாம் லிவிங்ஸ்டன், ஷஷாங்க் சிங், அசுதோஷ் சர்மா சொற்ப ரன்களில் விக்கெட்டை பறிகொடுத்தனர். அப்போது களத்திற்கு வந்த ஹர்ப்ரீத் சிங் பாட்டியா மற்றும் ஹர்ப்ரீத் ப்ரார் அதிரடியாக விளையாடினார்கள்.

**143 ரன் இலக்கு...**

அப்போது ஹர்ப்ரீத் ப்ரார் 29 ரன்களில் விக்கெட்டை பறிகொடுத்தார். பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 142 ரன்கள் எடுத்தது. குஜராத் டைட்டன்ஸ் அணி 143 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட்டிங்கை தொடங்கிது. கேப்டன் ஷுப்மன் கில் மற்றும் சாஹா இணைந்து இன்னிங்ஸை ஓப்பன் செய்தனர். சாஹா 13 ரன்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சாய் சுதர்ஷன் களத்துக்கு வந்தார். 35 ரன்கள் எடுத்த நிலையில் கில் அவுட் ஆனார். அவரை லிவிங்ஸ்டன் வெளியேற்றினார். தொடர்ந்து மில்லர், சாய் சுதர்ஷன், அஸ்மதுல்லா ஓமர்சாய் ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

**குஜராத் வெற்றி...**

சாய் சுதர்ஷன் 31 ரன்கள் எடுத்திருந்தார். அதன் பின்னர் ராகுல் தெவாட்டியா மற்றும் ஷாருக்கான் இணைந்து பொறுப்புடன் ஆடினர். ஹர்ஷல் படேல் வீசிய 19-வது ஓவரில் 2 விக்கெட்களை கைபற்றினார். ஷாருக் மற்றும் ரஷித் கானை அவர் அவுட் செய்தார். 19.1 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 146 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது குஜராத். தெவாட்டியா 18 பந்துகளில் 36 ரன்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். பஞ்சாப் அணிக்காக ஹர்ஷல் படேல் 3 விக்கெட்கள், லிவிங்ஸ்டன் 2 விக்கெட்கள், அர்ஷ்தீப் மற்றும் சாம் கரன் தலா 1 விக்கெட் வீழ்த்தி இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை சாய் கிஷோர் வென்றார்.

**சுப்மன் கில் பேட்டி...**

வெற்றி பெற்ற பின் குஜராத் கேப்டன் சுப்மன் கில் அளித்த பேட்டியில் கூறியதாவது, இந்த போட்டியை நாங்கள் முன்கூட்டியே முடிக்க நினைத்தோம். ஆனால் போட்டி மைதானத்தின் தன்மை காரணமாக கடைசி ஓவர் வரை சென்றது. இறுதியில் இந்த இரண்டு புள்ளிகளை பெற்றதில் மிகவும் மகிழ்ச்சி. கேப்டன்சி செய்வது உண்மையிலேயே எனக்கு ஆர்வமாக இருக்கிறது. அனைத்தும் நன்றாக சென்று கொண்டிருக்கிறது. நான் பேட்டிங் செய்ய களமிறங்கும் போது ஒரு பேட்ஸ்மேனாகவே விளையாட விரும்புகிறேன். .

இவ்வாறு அவர் கூறினார்.

## விராட் கோலிக்கு அபராதம்

**ஐ**.பி.எல். தொடரில் பெங்களூரு அணியை 1 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி கொல்கத்தா வெற்றி பெற்றது. முன்னதாக இந்த ஆட்டத்தில் இலக்கை நோக்கி களம் இறங்கிய பெங்களூரு அணியின் துவக்க வீரரான விராட் கோலி சந்தித்த முதல் பந்திலேயே பவுண்டரி அடித்து அதிரடியாக தொடங்கி 2 சிக்சர்களும் அடித்து அசத்தினார். அவர் 7 பந்துகளில் 18 ரன்கள் அடித்த நிலையில் ஹர்சித் ராணா புல்டாசாக வீசிய 3-வது ஓவரின் முதல் பந்தில் கேட்ச் முறையில் ஆட்டமிழந்தார். ஆனால் அந்த பந்து இடுப்புக்கு மேலே செல்வதுபோல் தெரிந்தது. இதனால் அவர் நடுவரின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்தார். ரிவியூவில் அவர் கீரிசுக்கு வெளியே நிற்பது தெரிந்தது. மேலும் ரிவியூவில் பந்தை அவர் அடிக்காமல் விட்டால் ஸ்டம்ப் லைனில் சரியாக செல்வதுபோல் தெரிந்தது.

இதனால் கள நடுவர் தீர்ப்பின் படி விராட் கோலிக்கு அவுட் வழங்கப்பட்டது. இதனால் அதிருப்தி அடைந்த விராட் கோலி கள நடுவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். கோபத்துடனேயே பெவிலியன் நோக்கி சென்றார். அதோடு போட்டி முடிந்த பின்னர் கூட அம்பயர்களுடன் விராட் கோலி அந்த முடிவு குறித்து விவாதித்துக் கொண்டே இருந்தார். இந்நிலையில் நடுவருடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பெங்களூரு அணியின் நட்சத்திர வீரரான விராட் கோலிக்கு, விதிமுறையை மீறியதாக இந்த போட்டி கட்டணத்தில் இருந்து 50 சதவீதம் அபராதம் விதிக்கப்படுவதாக ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

## சுரேஷ் ரெய்னா திடீர் விளக்கம்

**கொ**ரோனா பரவல் காரணமாக 2020-ம் ஆண்டு ஐ.பி.எல். தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்றது. இங்கு செல்வதற்கு முன்பாகவே ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் வீரர்கள் 15 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு, அழைத்து செல்லப்பட்டனர். அப்போது சி.எஸ்.கே. அணிக்காக விளையாடிய சுரேஷ் ரெய்னா, 15 நாட்கள் ஹோட்டல் அறையில் தனிமைப்படுத்தப்பட்டு அணியினருடன் பயணம் மேற்கொண்டார். ஆனால் திடீரென ஐ.பி.எல். தொடர் தொடங்குவதற்கு முன்பாகவே சொந்த ஊர் திரும்பினார். இதற்கு சி.எஸ்.கே. அணி நிர்வாகம் சுரேஷ் ரெய்னாவிற்கு பால்கனி அறை கொடுக்காததே காரணம் என்று கூறப்பட்டது.

இந்நிலையில் இந்த சர்ச்சை தொடர்பாக சுரேஷ் ரெய்னா பேசுகையில், 2020-ம் ஆண்டு ஐ.பி.எல். தொடரின் போது எனது உறவினர்கள் சிலர் கொலை செய்யப்பட்டார்கள். பதான்கோட்டில் என்னுடைய உறவினரின் மொத்த குடும்பமும் கொள்ளையர்களால் கொலை செய்யப்பட்டனர். இதனால் எனது தந்தை மற்றும் குடும்பத்தினர் சோகத்தில் இருந்தனர். அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் ஊர் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதுகுறித்து டோனி மற்றும் சி.எஸ்.கே. நிர்வாகத்திடம் கூறினேன். குடும்பத்தினரே முக்கியம் என்பதால், நான் உடனடியாக திரும்பினேன் என்று தெரிவித்துள்ளார்.

## சாம்கரனை விளாசிய சேவாக்

**ந**டப்பு ஐ.பி.எல். தொடரில் ஆரம்பக்கட்ட போட்டிகளில் பஞ்சாப் கேப்டனாக செயல்பட்ட ஷிகர் தவான் காயத்தால் கடந்த சில போட்டிகளாக விளையாடவில்லை. அவருக்கு பதிலாக ரூ. 18.50 கோடிக்கு வாங்கப்பட்ட இங்கிலாந்து வீரர் சாம் கர்ரன் தற்காலிக கேப்டனாக செயல்பட்டு வருகிறார். கேப்டனானதும் சாம் கர்ரன் தொடக்க ஆட்டக்காரராக களம் இறங்கி ஆடி வருகிறார். அசுதோஷ் சர்மா, ஷஷாங் சிங் போன்ற நல்ல பார்மில் இருக்கும் வீரர்களை விட்டுவிட்டு தாமே ஓப்பனிங்கில் களமிறங்கும் அவர் இதுவரை பேட்டிங், பவுலிங் ஆகிய எதிலுமே தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

இந்நிலையில் பஞ்சாப் நிர்வாகத்தில் நான் இருந்திருந்தால் சாம் கர்ரனை அணியில் எடுத்திருக்க மாட்டேன் என இந்திய முன்னாள் வீரர் சேவாக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, ஒருவேளை நான் பஞ்சாப் நிர்வாகத்தில் இருந்தால் அவரை எனது அணியில் கூட எடுத்திருக்க மாட்டேன். பேட்டிங் ஆல் ரவுண்டர் அல்லது பவுலிங் ஆல் ரவுண்டர் ஆகிய எந்த வேலைக்கும் அவரை எடுத்திருக்க மாட்டேன். கொஞ்சமாக மட்டும் பந்து வீசி, பேட்டிங் செய்யும் அவரைப் போன்ற வீரரால் எந்த பயனுமில்லை. ஒன்று நீங்கள் நன்றாக பேட்டிங் செய்து வெற்றியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் அல்லது பந்து வீசி போட்டியில் வெற்றியை பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால் எதையும் சரியாக செய்யாத அவரை போன்ற வீரரை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## கோலிக்கு டி வில்லியர்ஸ் ஆதரவு

**கொ**ல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் தனது அவுட் குறித்து அதிருப்தி அடைந்த விராட் கோலி கள நடுவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். கோபத்துடனேயே பெவிலியன் நோக்கி சென்றார். அதோடு போட்டி முடிந்த பின்னர் கூட அம்பயர்களுடன் விராட் கோலி அந்த முடிவு குறித்து விவாதித்துக் கொண்டே இருந்தார். இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து தனது கருத்தினை அளித்துள்ள ஏ பி டி வில்லியர்ஸ் குறிப்பிடுகையில்., இது நடுவரின் தவறு கிடையாது. ஆனாலும் இந்த விக்கெட் கொடுக்கப்பட்ட விதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் தொழில்நுட்பத்தை காலத்திற்கு ஏற்றார்போல் மாற்றிக் கொள்ள வேண்டும்.

என்னை பொறுத்தவரை இந்த விக்கெட் நியாயம் அல்ல என ஏ.பி.டி கருத்து தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### கர்நாடகாவில் 2-ம் கட்ட தேர்தல்:

# வேட்புமனுக்களை வாபஸ் பெற அவகாசம் முடிந்தது

**பெங்களூரு, ஏப். 23-**

கர்நாடகாவில் 2-ம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனுக்களை வாபஸ் பெற கால அவகாசம் நேற்றுடன் முடிந்தது.

கர்நாடகத்தில் உள்ள 28 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு வருகிற 26-ந் தேதி மற்றும் மே 7-ந் தேதி என 2 கட்டமாக தேர்தல் நடக்கிறது. முதல்கட்டமாக வருகிற 26-ந் தேதி 14 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறுவதால், அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். 2-வது கட்டமாக மே மாதம் 7-ந்தேதி பெலகாவி, பல்லாரி, தாவணகெரே, சிவமொக்கா, பாகல்கோட்டை, கலபுரகி உள்பட 14 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த 14 தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 12-ம் தேதி தொடங்கி 19-ந் தேதி வரை நடந்தது. அதன்படி, மத்திய மந்திரி பிரகலாத் ஜோஷி, முன்னாள் முதல்-மந்திரி பசவராஜ் பொம்மை, முன்னாள் முதல்-மந்திரி எடியூரப்பாவின் மகன் ராகவேந்திரா, மந்திரிகள் லட்சுமி ஹெப்பால்கரின் மகன், சதீஸ் ஜார்கிகோளியின் மகள் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். 2-ம் கட்ட தேர்தலுக்காக மொத்தம் 335 வேட்பாளர்கள் 503 மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

2-ம் கட்ட தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது கடந்த 3 தினங்களுக்கு முன்த பரிசீலனை நடைபெற்றது. இதில், 109 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு இருந்தது. 272 வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வேட்பு மனுக்களை வாபஸ் பெற நேற்று கடைசி நாளாகும். நேற்று 14 தொகுதிகளுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியானது.

இந்த நிலையில், 2-ம் கட்ட தேர்தலில் சிவமொக்கா தொகுதியில் முன்னாள் முதல்வர் எடியூரப்பாவின் மகன் ராகவேந்திராவை எதிர்த்து சுயேச்சையாக முன்னாள் மந்திரி ஈசுவரப்பா போட்டியிடுவதற்கு மனு தாக்கல் செய்துள்ளார். அதுபோல், உப்பள்ளி-தார்வார் தொகுதியில் மத்திய மந்திரி பிரகலாத் ஜோஷியை எதிர்த்து திங்களேஷ்வரர் மடாதிபதியும் மனு தாக்கல் செய்துள்ளார். அவர்களது போட்டியால் பா.ஜனதா வேட்பாளர்களின் வெற்றி பாதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

குறிப்பாக தனது மகனுக்கு சீட் கிடைக்காத அதிருப்தியில் சிவமொக்கா தொகுதியில் ஈசுவரப்பா சுயேச்சையாக போட்டியிடுகிறார். பா.ஜனதா கட்சியில் இருந்து அவர் விலகவும் இல்லை, அக்கட்சியும் ஈசுவரப்பாவை இன்னும் நீக்கவும் இல்லை. அதே நேரத்தில் வேட்புமனுவை திரும்ப பெறாவிட்டால், கட்சியில் இருந்து ஈசுவரப்பா நீக்கப்படுவார் என்று பா.ஜனதா மேலிடம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் ஈசுவரப்பா தனது மனுவை வாபஸ் பெறுவாரா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

### ஆந்திர சட்டசபை தேர்தல்:

# வேட்பாளர் பட்டியலை வெளியிட்டது காங்கிரஸ்

**ஐதராபாத், ஏப். 23-**

ஆந்திரப் பிரதேசத்தில் அடுத்த மாதம் நிகழவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 38 வேட்பாளர்களை காங்கிரஸ் நேற்று அறிவித்துள்ளது.

மாநிலத்தில் 175 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப் பேரவை மற்றும் 25 மக்களவைத் தொகுதிகளுக்கு மே 13ஆம் தேதி ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெற உள்ளது. அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் 38 வேட்பாளர்களின் பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளார். அதில் 10 தொகுதியில் வேட்பாளர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன் மூலம், ஏற்கனவே 114 பேரை அறிவித்திருந்த நிலையில், இதுவரை 142 பேரை சட்டப்பேரவைத் தேர்தலுக்கு அக்கட்சி வேட்பாளர்களை அறிவித்துள்ளது. முலாம் ரெட்டி துருவரெட்டி, முதல்வர் ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் தலைவருமான ஜெகன்மோகன் ரெட்டியை எதிர்த்து புலிவெந்துலா தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகிறார்.

கடப்பா மக்களவைத் தொகுதியின் கீழ் உள்ள தொகுதிகளில் புலிவெந்துலாவும் ஒன்று, அங்கு முதல்வர் ரெட்டியின் சகோதரியும், மாநில காங்கிரஸ் தலைவருமான ஒய்.எஸ்.சர்மிளா ரெட்டி தனது உறவினரும், ஒய்எஸ்ஆர் வேட்பாளருமான அவினாஷ் ரெட்டியை எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

# இன்டியா கூட்டணிக்கு முழு ஆதரவு

## மேற்கு வங்க முதல்வர் மம்தா அறிவிப்பு

**கொல்கத்தா, ஏப். 23-**

இன்டியா கூட்டணி வென்று மத்தியில் ஆட்சிக்கு வந்தால் முழு ஆதரவு தருவோம் என மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில் ராய்கஞ்ச் என்ற இடத்தில் நடந்த தேர்தல் பேரணியில் மம்தா பானர்ஜி பேசியதாவது: இன்டியா கூட்டணி வென்று மத்தியில் ஆட்சிக்கு வந்தால் முழு ஆதரவு தருவோம். இன்டியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் மேற்கு வங்கம் முக்கிய பங்கு வகிக்கும். மேற்கு வங்கத்தில் திரிணமுல் காங்கிரஸ் தனித்துதான் போட்டியிடும்.

நீதித்துறையில் பா.ஜ., தலைவர்கள் தங்களின் செல்வாக்கை பயன்படுத்துகின்றனர். மேற்குவங்க மாநிலத்தில் ஆட்சேர்ப்பு செயல்முறையை ரத்து செய்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இது சட்ட விரோதமானது. வேலை இழந்தவர்களுக்கு நாங்கள் துணை நிற்கிறோம். அவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வோம். இவ்வாறு அவர் பேசினார்.

### சென்னைக்கு குடிநீர் ஆதரமாக இருக்கும்

# வீராணம் ஏரி வறண்டது

**கடலூர், ஏப். 23-**

கடலூர் மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய வீராணம் ஏரி வறண்டு காணப்படுகிறது.

தமிழ் நாட்டில் இன்றளவும் உயிர்ப்புடன் விளங்கும் ஒரே ஆறு காவிரி ஆறு ஆகும். இக்காவிரி ஆற்றில் மேட்டூர் அணைக்குப் பிறகு அதிக அளவில் தண்ணீரை சேமித்து விவசாயத்திற்கும், குடிநீருக்கும் பயன்படுத்தக் கூடிய நன்னீர் ஆதாரமாக விளங்கக் கூடியதாக அமையப் பெற்றது கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி ஆகும். கடந்த ஆறு மாதங்களாக தென்னிந்தியாவில் பருவமழை குறைந்ததன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர் வரத்து குறைந்ததால், வீராணம் ஏரி தற்சமயம் வறண்டு காணப்படுகிறது.

இந்த வீராணம் ஏரியானது கடலூர் மாவட்டத்தில் 50,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட விளை நிலங்களுக்கு பாசன ஆதாரமாகவும் மேலும் சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஆதாரமாகவும் தற்போது விளங்குகிறது. எதிர்வரும் மழைக்கு முன்பாக வீராணம் ஏரியை தூர்வாரி, புணரமைத்து கரையை பலப்படுத்திக் கொண்டால் வரும் காலங்களில் அதிக அளவு தண்ணீரை ஏரியில் சேமித்து அதிக பயன்பெற முடியும். ஏரியில் படிந்துள்ள வண்டல் மண்ணை ஒரு மீட்டர் ஆழத்திற்கு அப்புறப்படுத்தி ஆழப்படுத்தியும் மேலும் அங்காங்கே உள்ள மன்மேடுகளை அகற்றவும் வேண்டும்.

தூர் வாருதலுக்கு கிராம நிர்வாக அலுவலர் ஒப்புதல், வட்டாட்சியர் அனுமதி மற்றும் சுரங்கங்களின் இணை இயக்குநர் அனுமதி என்று காலம் தாழ்த்தாமல், வீராணம் ஏரியைச் சுற்றிலும் அமைந்துள்ள காட்டுமன்னார்கோயில், சிதம்பரம், புவனகிரி மற்றும் திருமுட்டம் தாலுக்கா ஆகிய நான்கு தாலுக்காக்களிலும் நிலம் வைத்திருக்கும் அனைத்து உழவர்களுக்கும் டிராக்டர்கள் மூலம் வண்டல் மண் எடுக்க பொதுவான முறையில் அனுமதி அளிக்க வேண்டும்.

மேற்கண்ட நான்கு தாலுக்காவை சேர்ந்த உழவர்களுக்கும் இந்த வீராணம் ஏரியில் பயன்பாட்டு மற்றும் பண்பாட்டு உரிமையும் உள்ளதால் வண்டல் எடுக்க அப்பகுதியை சார்ந்த உழவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. அருகில் உள்ள என்எல்சி போன்ற பெருநிறுவனங்களின் துணையையும் இணைத்துக் கொண்டு வரும் 3 மாதங்களுக்குள்ளாக தூர்வாரும் பணிகளை விரைந்து மேற்கொண்டு முடிக்கலாம். தற்செயலாக வரண்டு உள்ள வீராணம் ஏரியை விரைந்து தூர்வாரி புணரமைத்து நீராதாரத்தை பெருக்குவது அரசின் தலையாய கடமையாகும் என்கிறார் இயற்கை உழவர் க.சுரேஷ்குமார்.

# நடிகர் ரஜினி பட தலைப்பு அறிவிப்பு

**சென்னை, ஏப். 23-**

ஜெயிலர் பட வெற்றியைத் தொடர்ந்து நடிகர் ரஜினிகாந்த்தின் 171வது படத்திலும் சன் பிக்சர்ஸ் மீண்டும் இணைகிறது. இந்தப் படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்க, அனிருத் இசையமைக்கிறார். இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை சன் பிக்சர்ஸ் சமீபத்தில் வெளியிட்டிருந்தது. மேலும், இப்படத்தில் நாகார்ஜுனா, ரன்வீர் சிங், சத்யராஜ் உள்ளிட்ட பிரபலங்கள் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியானது. 32 ஆண்டுகளுக்குப் பிறகு ரஜினியுடன் நடிகை ஷோபனா நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், ரஜினியின் 171-வது படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. இதில், படத்தின் பெயர் 'கூலி' என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, ரஜினிக்கு வில்லனாக நடிகர் மைக் மோகன் நடிக்கவுள்ளதாகவும், முக்கிய கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதி நடிக்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.



● பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று வரும் நிலையில், நாடு முழுவதும் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து வருவது குறித்து நேற்று டெல்லியில் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் தலைமையில் அவசரமாக கூடி ஆலோசித்தது. இந்த கூட்டத்தில் தலைமை தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஞானேஷ்குமார், சுக்பீர்சிங் சந்து, இந்திய வானிலை ஆய்வு மைய அதிகாரிகள், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய அதிகாரிகள், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



● மதுரை சித்திரை திருவிழாவின் முத்தாய்ப்பு நிகழ்ச்சியான அழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் இன்று காலை நடைபெறவுள்ளது. முன்னதாக நேற்று கள்ளழகருக்கு மூன்றுமாவடி மற்றும் தல்லாகுளத்தில் எதிர்சேவை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு கோவிந்தா, கோபாலா என்று முழக்கமிட்டு அழகரை வரவேற்றனர்.

# 65 வயதுக்கு மேற்பட்டோரும் மருத்துவ காப்பீடு பெறலாம்

## இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையம் அறிவிப்பு

புதுடெல்லி, ஏப்.23-

இனி 65 வயதுக்கு மேற்பட்டவர்களும் மருத்துவ காப்பீடு பெறலாம் என இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ) தெரிவித்துள்ளது.

இந்தியாவில் மருத்துவ காப்பீடுகளை (பாலிசி) எடுப்பதற்கான வயது வரம்பு 65 ஆக இருந்தது.

தற்போது இந்த வயது வரம்பை இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ) நீக்கியுள்ளது. அதாவது, இனி அனைத்து வயதினரும் மருத்துவ காப்பீட்டை எடுக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ காப்பீட்டுக்கான உச்ச வயது வரம்பு நீக்க நடைமுறை கடந்த ஏப். 1-ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐஆர்டிஏஐ வெளியிட்ட அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.,

அனைத்து வயதினருக்கும் மருத்துவ காப்பீடுகளை வழங்குவதை காப்பீட்டு நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும். ஆணையம் அங்கீகரித்துள்ள மூத்த குடிமக்கள், மாணவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள் போன்ற பிரிவினருக்கான சிறப்பு மருத்துவ காப்பீட்டு திட்டங்களை காப்பீட்டு நிறுவனங்கள் வடிவமைக்கலாம். மேலும், எத்தகைய உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டோருக்கும் மருத்துவ காப்பீட்டு திட்டங்களை கட்டாயம் வழங்க வேண்டும்.

காப்பீட்டுதாரர்களின் விருப்பப்படி, ப்ரீமியம் தொகையை தவணை முறையில் காப்பீட்டு நிறுவனங்கள் வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

பயண காப்பீட்டுகளை பொருத்தவரை பொது, மருத்துவ காப்பீட்டு நிறுவனங்கள் மட்டுமே அவற்றை வழங்க முடியும். சித்தமருத்துவம், ஆயுர்வேதம், ஹோமியோபதி, யுனானி, இயற்கை மருத்துவம், யோகா ஆகிய மருத்துவ சிகிச்சைகளில் காப்பீட்டுக்கு எவ்வித எல்லை வரம்பும் இல்லை.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகம், கர்நாடகம் உள்ளிட்ட

# 6 மாநிலங்களில் வெப்ப அலை வீசும்

## இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

புதுடில்லி, ஏப். 23-

தமிழகம், கர்நாடகா உள்ளிட்ட 6 மாநிலங்களில் இன்று (ஏப்ரல் 22) வெப்ப அலை வீசக்கூடும் என இந்திய வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சில நாள்களாக தமிழகத்தில் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், பல மாவட்டங்களில் 100 டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேல் வெயில் சுட்டெரித்துக் கொண்டுள்ளது.

இது குறித்து இந்திய வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது., தமிழகம், கர்நாடகா, மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், ஒடிசா, மேற்கு வங்கம் ஆகிய 6 மாநிலங்களில் வெப்ப அலை வீசக்கூடும். வெப்ப அலை வீசும் என்பதால் பொது மக்கள் அசவுகரியமான சூழலை எதிர்கொள்ளலாம்.

இதனால் உடல்நலக் குறைவு ஏற்பட வாய்ப்புள்ளது. குழந்தைகள், முதியோர், உடல்நலம் பாதிக்கப்பட்டோர் வெயில் கடுமையாக இருக்கும் நேரத்தில் வெளியே வர வேண்டாம். டெல்டா மற்றும் வட தமிழகத்தில் வெப்பம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தமிழக உள் மாவட்டங்களில் 42 டிகிரி செல்சியஸ் வரை வெயில் பதிவாக வாய்ப்புள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான

# 14 வயது சிறுமியின் 30 வார கருவை கலைக்க சுப்ரீம் கோர்ட் அனுமதி

புதுடில்லி, ஏப். 23-

பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான 14 வயது சிறுமியின் 30 வார கருவை கலைக்க சுப்ரீம் கோர்ட் அனுமதி அளித்து உத்தரவிட்டது.

மஹாராஷ்டிராவில் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான 14 வயதுடைய சிறுமி கர்ப்பமடைந்தார். அச்சிறுமியின் கருவை கலைக்க அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர்.

இதற்காக மருத்துவமனையை அணுகிய போது, சிறுமியின் வயிற்றில் கரு கிட்டத்தட்ட 30 வாரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது.

மருத்துவ கருக்கலைப்பு சட்டத்தின்படி, கருவை கலைக்கக்கூடிய கால வரம்பை கடந்துவிட்டதால் கருக்கலைப்புக்கு மருத்துவமனை நிர்வாகம் மறுத்து விட்டது.

இதனால் மும்பை உயர் நீதிமன்றத்தில் சிறுமியின் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரித்த நீதிபதிகள், சிறுமியின் கருவை கலைக்க அனுமதிக்க முடியாது என தீர்ப்பு வழங்கியது.

இதனையடுத்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு கடந்த ஏப்.19-ல் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், ஜே.பி.பர்திவாலா அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, சிறுமிக்கு மருத்துவ பரிசோதனை நடத்தி, கருவை கலைக்க முடியுமா? அவ்வாறு செய்தால் சிறுமிக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா? என அறிக்கை அளிக்கும்படி மும்பை சியோன் மருத்துவமனைக்கு உத்தரவிட்டது.

நேற்று (ஏப்.,22) இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, கருக்கலைப்புக்கு அனுமதி மறுத்த மும்பை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்து, சிறுமியின் 30 வார கருவை கலைக்க நீதிபதிகள் அனுமதி அளித்தனர்.

இந்த வழக்கு விதிவிலக்கான வழக்கு என்பதால் மருத்துவமனை அறிக்கையின் அடிப்படையில் கருக்கலைப்புக்கு அனுமதிப்பதாகவும், இதனால் சிறுமிக்கு சில ஆபத்துகள் இருந்தாலும், பிரசவ கால அபாயத்தைவிட உயிருக்கு ஆபத்து அதிகமில்லை என மருத்துவ அறிக்கை தெரிவித்ததாகவும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

# அமெரிக்கா: விபத்தில் இந்திய மாணவர்கள் இருவர் உயிரிழப்பு

நியூயார்க், ஏப். 23-

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் பீனிக்ஸ் சிட்டி நகரில் கார் ஒன்றில் இந்திய மாணவர்கள் இருவர் பயணம் செய்தபோது, எதிர் திசையில் இருந்து விரைவாக வந்த மற்றொரு கார் மோதி விபத்து ஏற்பட்டதில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்தியாவின் தெலுங்கானாவை சேர்ந்த மாணவர்கள் முக்கா நிவேஷ் (வயது 19) மற்றும் கவுதம் பார்சி. நிவேஷ், கரீம் நகர் மாவட்டத்தின் ஹுசுராபாத் நகரை சேர்ந்தவர். கவுதம், ஜங்காவன் மாவட்டத்தின் ஸ்டேசன் கான்பூர் நகரை சேர்ந்தவர். அவர்கள் இருவரும் அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் பிரிவுக்கான பொறியியல் படிப்பை படித்து வந்துள்ளனர். இந்நிலையில், அரிசோனா மாகாணத்தில் பீனிக்ஸ் சிட்டி நகரில் கார் ஒன்றில் இருவரும் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது, எதிர் திசையில் இருந்து விரைவாக வந்த மற்றொரு கார் ஒன்று அவர்களுடைய கார் மீது மோதி விபத்திற்குள்ளானது. இந்த மோதலில், இந்திய மாணவர்கள் 2 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் அரிசோனா போலீசார் சம்பவ பகுதிக்கு சென்று உடல்களை கைப்பற்றினர்.

இதன் பின்னர், அவர்கள் இருவரும் அடையாளம் காணப்பட்டு உள்ளனர். இந்த விபத்தில், இவர்கள் சென்ற கார் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநருக்கு காயம் ஏற்பட்டு உள்ளது. எனினும், அவர் மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து வீடு திரும்பி விட்டார் என போலீசார் தெரிவித்தனர். ஏப்ரல் 20-ந் தேதி இந்த கொடிய விபத்து நடந்துள்ளது.

இந்த விபத்து ஏற்பட்டதற்கான காரணம் பற்றி விசாரணை நடந்து வருகிறது. அவர்களின் மறைவுக்கு அரிசோனா போலீசார் இரங்கல் வெளியிட்டனர்.

## கெஜ்ரிவாலின் உடல்நிலையை பரிசோதிக்க

# நிபுணர் குழு அமைக்க எய்ம்ஸ் நிர்வாகத்திற்கு கோர்ட் உத்தரவு

டெல்லி, ஏப். 23-

கெஜ்ரிவாலின் உடல் நிலையை பரிசோதனை செய்ய நிபுணர் குழு அமைக்கும்படி டெல்லி எய்ம்ஸ் நிர்வாகத்திற்கு டெல்லி சி.பி.ஐ. சிறப்பு கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

டெல்லி அரசின் மதுபான கொள்கை முறைகேட்டில் நடந்த சட்ட விரோத பண பரிமாற்றம் தொடர்பாக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை கடந்த மாதம் 21-ம் தேதி அமலாக்கத் துறையினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட கெஜ்ரிவால் தற்போது திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, சர்க்கரை நோயாளியான கெஜ்ரிவாலுக்கு இன்சுலின் வழங்க கோர்ட் அனுமதியளித்தும் திகார் சிறை நிர்வாகம் அதை வழங்கவில்லை என்றும், கெஜ்ரிவாலை கொல்ல சதி நடப்பதாகவும் ஆம் ஆத்மி குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்நிலையில், சர்க்கரை நோயாளில் பாதிக்கப்பட்டுள்ள தனக்கு தினமும் வீடியோ கான்பிரன்ஸ் மூலம் டாக்டர்கள் மருத்துவ ஆலோசனை வழங்க அனுமதிக்கும்படி கெஜ்ரிவால் டெல்லி சி.பி.ஐ. சிறப்பு கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு சிறப்பு நீதிபதி கவெரி பவிஜா முன் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, கெஜ்ரிவாலின் கோரிக்கையை நீதிபதி நிராகரித்தார்.

மேலும், கெஜ்ரிவாலுக்கு உள்ள மருத்துவ பிரச்சினைகள் குறித்து பரிசோதிக்கவும், சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ள அவருக்கு இன்சுலின் தடுப்பூசி செலுத்துவது அவசியமா? என்பதை ஆய்வு செய்யவும் மருத்துவக் குழுவை அமைக்கும்படி டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை நிர்வாகத்திற்கு நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# மதுரை மாசி வீதிகளில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

லக்கனத்தில் ரதாரோஹணம் நடைபெற்று காலை 6.30 மணிக்கு முதலில் சுவாமி தேரையும், தொடர்ந்து அம்மன் தேரையும் பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர்.

தேரோட்டத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து சுவாமி-அம்மன் தேரை இழுத்துச்சென்றனர். 4 மாசி வீதிகளிலும் தேர்கள் அசைந்தாடி செல்வதை பொதுமக்கள் சாலையின் இருபுறமும் உள்ள உயர்ந்த கட்டிடங்களில் நின்றும் தரிசனம் செய்தனர்.

தேருக்கு முன்பாக பக்தர்கள் மீனாட்சி-சுந்தரேசுவரர் பதிகம் பாடிச் சென்றனர். சுவாமி-அம்மன் தேருக்கு முன்பு அலங்கரிக்கப்பட்ட யானை அழைத்துச் செல்லப்பட்டது. அதன்பிறகு விநாயகர், முருகன், நாயன்மார்கள் தனித்தனி சிறிய சப்பரங்களில் சென்றனர்.

பகல் 11.30 மணியளவில் மாசி வீதிகளை வலம் வந்த தேர்கள் நிலையை வந்தடைந்தன. அதன் பிறகு சண்டிகேஸ்வரர் வீதி உலா நடைபெற்றது. தேரோட்ட விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றதை கருத்தில் கொண்டு ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

வெளி மாவட்டங்களில் இருந்தும் கூடுதலாக போலீசார் வரவழைக்கப்பட்டு கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டனர். திருவிழாவை காணவரும் பக்தர்கள் தங்களது வாகனங்களை நிறுத்துவதற்கு தனி இடவசதி செய்யப்பட்டிருந்தது.

மக்கள் சிரமமின்றி தரிசனம் செய்ய வசதியாக போக்குவரத்தில் போலீசார் மாற்றங்கள் செய்து அதனை செயல்படுத்தினர். தேரோட்டத்தை தொடர்ந்து நேற்று மாலையில் மீனாட்சி அம்மன், பிரியாவிடை-சுந்தரேசுவரர் சப்தாவர்ண சப்பரத்தில் மாசி வீதிகளை வலம் வந்தனர்.

அதை தொடர்ந்து உச்சி காலத்தில் பொற்றாமரை குளத்தில் தீர்த்த திருவிழா நடக்கிறது. இரவு 10.15 மணிக்கு திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமியும், பவளக்கனிவாய் பெருமாளும் 16 கால் மண்டபத்தில் இருந்து விடை பெற்றுச் செல்கின்றனர். இந்த நிகழ்ச்சியோடு மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா நிறைவு பெறுகிறது.

## நடிகை வைஜெயந்தி மாலா உள்ளிட்டோருக்கு

# பத்ம விருதுகளை வழங்கினார் ஜனாதிபதி திரௌபதி முர்மு

புதுடெல்லி, ஏப்.23-

நடிகை வைஜெயந்தி மாலா உள்ளிட்டோருக்கு டெல்லியில் குடியரசு தலைவர் மாளிகையில் பத்ம விருதுகளை ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கினார்.

2024-ம் ஆண்டிற்கான பத்ம பூஷண், பத்ம விபூஷண் விருதுகளை குடியரசு தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார். முன்னாள் குடியரசு துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு (74), பழம் பெரும் நடிகை வைஜெயந்தி மாலா (90), தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி (68), சென்னையைச் சேர்ந்த பரத நாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம் (80), பிகாரைச் சேர்ந்த மறைந்த சமூக ஆர்வலர் பிந்தேஸ்வர் பதக் ஆகியோருக்கு பத்ம விபூஷண் விருதும் வழங்கப்பட்டது.



கோவையைச் சேர்ந்த வள்ளி ஒயில் கும்மி நடனக் கலைஞர் எம்.பத்ரப்பனுக்கு (87) பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

குடியரசு தினத்தையொட்டி, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு பத்ம விருதுகளை மத்திய அரசு முன்னதாக அறிவித்திருந்தது.

தமிழகத்தைச் சேர்ந்த ஏழு பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. இவர்களில் பத்ம விபூஷண் இருவருக்கும், பத்ம பூஷண் ஒருவருக்கும், பத்மஸ்ரீ 4 பேருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தன.

கலைத்துறையில் சிறந்த சேவையாற்றியதற்காக வைஜெயந்தி மாலா, பத்மா சுப்பிரமணியம், சிரஞ்சீவி, விஜயகாந்துக்கும், பொது விவகாரங்களில் சிறப்பாக சேவைபுரிந்தற்காக வெங்கையாநாயுடுக்கும் இந்த விருதை மத்திய அரசு அறிவித்திருந்தது.

பத்ம விபூஷண் விருது 5 பேருக்கும், பத்ம பூஷண் விருது 17 பேருக்கும், பத்மஸ்ரீ விருது 110 பேருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தன.

அதில், தமிழக முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி, பாடகி உஷா உதுப், நடிகர் மிதுன் சக்கரவாத்தி, டென்னிஸ் வீரர் ரோஹன் போபண்ணா, ஸ்குவாஷ் வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா, கல்வி மற்றும் இலக்கிய பிரிவில் எழுத்தாளர் ஜோ டி குரூஸ், சேஷம்பட்டி டி சிவலிங்கம், இந்தியாவின் முதல் யானை பெண் பராமரிப்பாளர் பார்வதி பருவா, வன சூற்றுச்சூழல் ஆர்வலர் சாய்மி முர்மு, மிஸோரமின் சமூக ஆர்வலர் சங்தாங்கிமா, பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் பிரேமா தன்ராஜ், தெற்கு அந்தமானில் இயற்கை விவசாயம் செயது வரும் செல்லம்மாள், 650-க்கும் மேற்பட்ட அரிசி வகைகளை பாதுகாத்து வரும் காசர்கோட்டைச்சேர்ந்த விவசாயி சத்யநாராயண பெலேரி, சர்வதேச மல்லர்கம்பம் பயிற்சியாளர் உதய் விஸ்வநாத் தேஷ்பாண்டே என 110 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் வழங்கப்பட்டது.